982

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

19 FEB 1931

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ ஜனவரி ௴ 29௳ [No 4

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 61

2. அப்பர் (வைத்தியம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 63

3. சூளாமணி (நகரச் சருக்கம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 66

4. மானத சாத்திரம் (புலன்கள்)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 69

5. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 71

6. வர்த்தமானம் 79

கலாநிலயம்

15902

வாழ்வாங்கு வாழ்பவர்.

2.

அறம் பொரு ளின்பம் எனும் இம்மூன்றினையும் குறைவற எய்தியக்கால் இவ்வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தது ஆகுமோ, மற்று இவைகளை எய்திய பின்னும் வாழ்க்கை முழுமையை அடைவதற்கு வேறேதேனும் வேண்டுமோவெனச் சிந்திக்கத் தலைப்படுங்காலையில், அறத்தாறுபொருளீட்டி அப்பொருள் கொண்டு இன்பம் துய்ப்பதெனும்படி வழங்கி வருகின்ற வழங்கினைக் கருத்துட்கொள்ளும் நாம், துய்ப்பதெனும் நோக்கமுடைய அவ்வின்பம் எவ்வகைத்து என்பதை ஆராயப்புகுந்தோம். அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்காய இன்பமே, இன்பம் எனுந் தன்மைக்கு ஏற்றதாய் 'அறம் பொரு ளின்பம்' என்னுமத்தொடரில் அடங்கி யிருக்கின்றதாயினும், வையத்தில் வாழ்கின்றவர்களெல்லாம் அவ்வொரு இன்பத்தை மட்டுமே அடையவேண்டி வாழ்கின்றனரென்று உரைப்பதற்கு ஒண்ணாதாதலின், அச்சொல்லை இங்குப் பொதுவகையில் பயில்கின்றோம். பயின்று அதன் தன்மையை மயக்கமறக் கருத்துட்கொள்ள முயல்கின்றபோது மகிழ்ச்சி உவகை முதலியவைகளின் சிறப்புத் தன்மைகளையும் ஆராய வேண்டி நேர்கின்றது.

தன்னைப்பற்றி எழுகின்ற வொரு விரும்பத்தகுந்த உள்ளக்கிளர்ச்சியே மகிழ்ச்சி என்றுரைப்பதற்கு உரியதாவதைச் சென்றவாரம் சில உதாரணங்களால் காட்டினோம். தன்னுடைய நினைவே தலைசிறக்க எழுகின்ற இம்மகிழ்ச்சியை அடையவேண்டுமென்பது மாநுடப் பெருமைக்கு ஆதாரமாகுமென எமக்குத் தோன்றவில்லை. ஏனெனில், தன்னையே பற்றிய தொடர்பினால் ஒருவன் மகிழ்கின்றபோதெல்லாம் அவன் தன்னை ஒருவகையில் தாழ்த்திக் கொள்கின்ற தன்மை தோன்றாமல் தோன்றி நிற்கின்றதே.

தன்னைப்பற்றி மகிழ்கின்ற நினைவின் இலக்கணம் இருவகைத்து. தன்னையே பற்றித் தனியாக நினைப்பது ஒன்று. பிறரொடு தன்னை ஒப்புநோக்கி நினைப்பது மற்றொன்று. இருதிறத்தும், ஏழ்மை நினைவொன்று அம்மகிழ்ச்சியூடு தவழ்தலாவது நுனித்து நோக்கினால் உணரலாகலாம். பட்டும் மணியுங் கொண்டு தன்னைப் புனைந்துகொண்டான் ஒருவன் தன்னிழலைக் கண்ணாடியில் நோக்கி மகிழ்கின்றபோது அம்மகிழ்ச்சி தன்னையே பற்றித் தனியாக எழுகின்ற நினைவின் செய்தியாகும். இனி இவன், மற்றவர் முன் தன் புனைகோலப் பெருமையோடு நின்றுகொண்டு அவர் அணியாதன இவையிவை தான் அணிந்து கொண்டிருப்பதையும், அதுகண்டு அவர்களிற் சிலர் கருத்தழிவர் என்பதையும் எண்ணி மகிழ்கின்றபோது அம்மகிழ்ச்சி, பிறரொடு தன்னை ஒப்புநோக்கி எழுகின்ற நினைவின் செய்தியாகும். இவ்வண்ணம் தன்னைப்பற்றியதாய் ஒப்புநோக்கி மகிழ்வதற்குத் தனக்கு உடைமையாய ஒன்று இருத்தல் வேண்டுமெனும் அவசியமுமில்லை. பிறருக்கிருக்கின்ற வறுமை

JL
2211, M28KN
M31·4·4.

நோய் முதலிய துன்பங்கள் தனக்கு இல்லாமையை நினைத்து ஒப்புநோக்கும் பெற்றியிலும் அம்மகிழ்ச்சி எய்துதல் கூடும். நோயாலேனும், அருமந்த உறவினரை இழந்தேனும் வருந்துகின்ற அயலகத்தானைச் சென்று கண்டு பரிவு காட்டிவான் ஒருவன், வருந்துவார் நிலைகாணத் தானும் வருந்தலாமாயினும், "என் நற்காலம், யான் இந்நோய் எய்தாது பிழைத்தேன்; என் நற்காலம் இவனுக்கு உற்றஇழவு எனக்கு நேராமல் காத்தது" என்னுமோர் மகிழ்ச்சி அவனது உள்ளத்தின் ஆழத்தில் ஊறிக்கொண்டிருக்கும் என்று மேனாட்டுப் புலவர் ஒருவர் ஜோனதன் ஸ்விப்ட் என்னும் ஆங்கிலேயரோ அல்லது ரூஷ்புகூல்ட் என்னும் பிரான்ஸ்தேயத்தவரோ (என்பது இப்பொழுது எம் நினைவிற்கு வரவில்லை) என்றனர். பிறர்துயர் கண்டாற்றுது அழிகின்ற தூய்மையோர் இவ்வுலகின்கண் இலராகார் என்பதை மனதிற் கொள்ளுங்கால் இம்மொழிகள் நெடுவெம் பழியையே மாநுட இனத்தின் தலையில் சுமத்துவதுபோல் தோன்றுமெனினும் பொது முறையில் நோக்குங்கால் அது முற்றிலும் பொய்யுமன்று என்னல் வேண்டும். அஃதெவ்வாறாயினும் ஆகுக. பிறரொடு தன்னை ஒப்புநோக்கிக்கொள்வதால் பயக்கவல்ல மனக்கிளர்ச்சியை அறைந்து காட்டுகின்றது அம்மொழிகள். இவ்விடத்தில் நமக்கு வேண்டியது அவ்வளவே.

தன்னைத் தனியாகக்கொண்டேனும் பிறரொடு ஒப்புநோக்கியேனும் மகிழ்கின்ற போதெல்லாம் மனிதன் தன்னையறியாமலே தன்னைத்தாழ்த்திக் கொள்கின்றான் என்ற நுண்ணிய உண்மையை இரண்டாவதாக இனி உணர்தல் வேண்டும். இதனை உணரமுயலுமுன் தெளிந்துகொள்ளற்கு இன்றியமையாத தொன்றுண்டு. உடலின் இயக்கத்தை நடத்துதற்கு வேண்டிய குறைகளை நிறப்பும்பொருட்டுத் தூண்டுகின்றபசிதாகம் முதலியவைகள் தணிந்தவுடன் நேர்கின்றவோர் உடலமைதியை மனமகிழ்ச்சியென்று மயங்கலாகாது. மனித்தின் தொடர்பு இதனிலும் சிறிது உளதேனும் பெரும்பாலும் அது உடலின் செய்தியே. ஆதலின், பசி தாகமுற்று வருந்தினோன் ஒருவன் அது நீங்கியதும் எய்துகின்ற அமைதி நிலையினை மகிழ்ச்சியெனக்கொண்டு, இம்மகிழ்ச்சியால் எத்தாழ்மை வந்தெய்தும் என்றுவினவலாகாது. இந்நிலை மகிழ்ச்சி என்பதற்குரியதன்று என்பதை உட்கொண்டே சீத்தலைச் சாத்தனர், "வருந்திவந்தோர் அரும்பசிகளைந்து அவர் திருந்து முகங்காட்டும் தெய்வக்கடிஞை" என மணிமேகலையில் ஆபுத்திரன் வாயில்வைத்துரைக்கின்றார். கடும்பசியினல் வாடினோர், அதுகளைபப் பெற்றவுடன் எய்திய உடலின் அமைதிக்கு அறிகுறியாகத் திருந்துகின்றது அவர் முகம், என்பதல்லால் மகிழ்ச்சியால் கிளர்ந்தது அவர் மனம் என்பதற்கு இல்லை. கடும்பசியால் உழல்வோன் ஒருவன்முன் உணவுப் பொருள்கள் வைக்கப்பெற்றதும் அவன்பால் விளைகின்ற வேட்கை முதலியதூண்டல்களை மகிழ்ச்சியென்று மகிழ்தலும் நேரிதன்று. ஆயினும் இவ்விடயங்களை இங்கு இன்னும் அதிகமாகத் தொடர வேண்டுவதில்லை.

தன்னைத் தனியாகக் கருதியே ஒருவன் மகிழ்கின்ற தன்மையை நோக்குவோம். தான்விழைந்ததை எய்தியதால் யாதாவதொன்று பயக்கலாகிறதோ அதைஇம்மகிழ்ச்சிஎனப் பொதுவாகக்கொள்ளலாம். தனக்குத்தெரிந்தோ தெரியாமலோ இருந்த குறையொன்று தீர்ந்ததென்றும், அவ்வாறு தீர்ந்ததால் தான் முன்னிலும் உயர்ந்ததாக மதிக்கின்ற ஓர் கொள்கையின் இரகசியமே இம்மகிழ்ச்சி. பட்டாடை உடுத்திப் பளிங்கு நோக்குகின்றவன், அவ்வாடையை அணிவதன்முன் தன்பால் இருந்த வோர்குறை இப்பொழுதுதன்றோ நீங்கலாகின்றது என்னும் எண்ணத்தின் செய்கையே அவன் மகிழ்ச்சி. 'நீங்கிவிட்டது' என்னமல் 'நீங்கலாகின்றது' என்று நினைத்தே இங்கு உரைக்கின்றோம். முன்னிருந்த குறைகள் நீங்குவனபோல் தோன்றுகின்றபோதே உடனிற்குடன் பின்னுஞ்சில குறைகள் 'இவ்வாடையின் 'சரிகை' இன்னுஞ் சற்று அகலமாயிருந்தாலென்; இவ்வாடைக் கேற்ற 'வயிரமோதிரங்கள்' என்விரலில் இருந்தாலன்றோ நன்றெனக் கொள்ளலாம்" என்பனபோன்றன எழுதலும் புதுமையன்று. இவ்வண்ணமே பற்பல உதாரணங்களைக்கொண்டு மாநுடமனத்தியற்கையை உற்றுநோக்கிக் குறையொன்று தீர்ந்தது அல்லது தீர்கின்றது அல்லது இனித்தீரும் என்ற நினைவினல் மகிழ்ச்சி தோன்றலாகுந் தன்மையைச் சோதித்து உணர்ந்து கொண்டால் மேலினி நாம்சொல்ல நிற்பவைகளைத் தெளிந்து கொள்ளல் எளியதாகும். குறைகள் நீங்கி வருகின்ற அப்பொழுதே அயலயல் வேறு குறைகளின் நினைவு பிறக்கலாகும் பெற்றியையும், வேறோர் விடயத்தை யாம் விளக்கவருங்கால் உதவியாகும் பொருட்டு இங்ஙனமே ஓர்ந்து வைத்துக்கொள்ளல் நலம்.

அறிக்கை :—

புதுவருட சந்தாப் பணத்தை வி. பி-க்குக் காத்திராது மணிபார்டர் மூலம் அனுப்பி வைக்குமாறு நேயர்களைக் கேட்டுக் கொள்கின்றோம். புதிய ஆண்டு முதல் வி. பி. களை மூன்று நாட்களுக்கு மேல் தபால் நிலயத்தார் வைத்துக்கொள்ள மாட்டார்களாதலால், மணிபார்டர் மூலம் சந்தாவைச் செலுத்துவது எமக்கு மிகவும் உதவியாக விருக்கும். வி. பி. அனுப்ப நேருங்கால், தாமதஞ் செய்யாது பணம் கட்டிப் பத்திரிகையை பெற்றுக்கொள்ளும்படி நேயர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை 600 008

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்.

16. வைத்தியம்.

[45-வது பக்கத் தொடர்ச்சி]

உப்பிற்கு (Common Salt) மருந்தென்னும் பண்பு கொடுக்க மேல்நாட்டு வைத்தியர்கள் பின்னிடைவதுபோல் நமது நாட்டிலும் சிலர் ஒவ்வாதிருக்கலாம். ஆயினும் பசு முதலிய மிருகங்களுக்கு அதைத் தினம் ஒரு பிடி கொடுத்துவரின், நோயணுகா தென்பது மிருகசாதிகளின் வைத்திய சாஸ்திரத்திலும் ஆமோதிக்கப்பட்டதாம். கடல்நீரில் ஸ்நானம் செய்தால் தேகத்தின் சருமத்திலுள்ள புண்களும், ரணங்களும் நீங்கும். தேகத்திலுள்ள வாதநோய்க்கும் இது நன்மையென்பர். இதனல் சமுத்திரஸ்நானம் மாதத்திற்கு இரண்டொருமுறை விரதகாலங்களில் செய்யவேண்டுமென்பது தொன்றுதொட்டு நமதுநாட்டோர் கருத்தாயிருக்கின்றது. இவ்வாறுதேகசுகத்தின் பொருட்டு, வைத்தியமுறையில் அமைத்துள வைதீக ஒழுக்கம்போன்ற *விரதானுஷ்டானங்களாகிய தீர்த்த ஸ்நானம் சமுத்திரஸ்நானமென வழங்கிவரும் பழக்கங்களே மோட்சத்திற்கு வழியென எண்ணவேண்டாமெனப் பாவநாசத் திருக்குறுந்தொகையில் மற்றக் கிரியைகளைச் சேர்த்தாக்கி இவை யாவும் ஈசன்சேவடி பற்றாதார்க்கு மோட்சம் தாராவென்று அப்பர் கூறுகின்றார்:—

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோமநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே

பாவநாசத் திருக்குறுந்தொகை 2.

மருந்துவகைகளில் உப்புக்களென எடுத்துக் காட்டப்படுவனவற்றிற்குத் தாயாயும் துணையாயும் குணச்சான்றாயு முள்ளது கடலுப்பே. இனி ஏனைய மருந்துகளின் தன்மைகளையும் அவற்றின் வகுப்புக்களின் வண்ணமும் காண்போம்:—

உலோகங்கள்:-தேகத்தில் ஏற்படும்நோய்களைத் தீர்க்கும் மருந்துகளிற் சிலபஞ்சலோகங்களினின்று ஆக்கப்படும். அவற்றில் முதன்மையானது பொன். இது சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநத மென்று நால்வகைப்படும் (ஒவ்வொன்றும் $10\frac{1}{2}$ மாற்றுத் தங்கமே) இது நமது இரத்தத்தில் கலந்திருக்குமாயின் தேகம் மிகவும் வனப்புடையதாய் விளங்கும். அதனல் தங்க பஸ்மத்தை வைத்தியர் கொண்டாடுவர்.

"பொன்செய்த மேனியினீர்!
புலித் தோலை யரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும்
வெரித் தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள்
பரவையிவ டன்முகப்பே
என் செய்த வாறடிகே
ளடியேனிட் டறங் கெடவே"

என்னும் சுந்தரர் பாசுரங் காண்க. அப்பரும்

பொன்னைப் பானைப்
பொன்னிற்சுடர் போல்வதோர்
மின்னைப் பானை
விண்ணோரு மறிகிலர்
அன்னைப் பானை
யறத்துறை மேவிய
தன்னைப் பானைக்
கண்டீர் நான் தொழுவதே

திருநெல்வாயிலரத்துறை - திருக்குறுந்தொகை. 8.

முன்னு முப்புரஞ் செற்றன ராயினும்
அன்ன மொப்பரால் வந்தடைந் தார்க்கெலாம்
மின்னு மொப்பார் விரிசடை மேனிசெம்
பொன்னு மொப்பார் புத்தூரெம் புனிதரே

திரு அரிசிற்கரைப் புத்தூர் - திருக்குறுந்தொகை. 9.

அன்ப னையடி யாரிடர் நீக்கியைச்
செம்பொ னைத்திக ழுந்திருக் கச்சியே
கம்ப னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
நன்பொ னைக்கண்டு நானுய்யப் பெற்றனே.

திருக்கடுவாய்க் கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை. 3.

பொற்றாசுகள் கலந்த நீர் *தேகத்திற்கு மிக ஆரோக்கியம் கொடுக்கும்.

பைம்பொனே பவளக் குன்றே
பரமனே பால்வெண் ணீற்றா
செம்பொனே மலர்செய் பாதா
சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழு
மணியணா மலையு ளானே
என்பொனே யுன்னை யல்லா
லேதுநா னினைவி லேனே.

திருவண்ணாமலைத் திருநேரிசை 4.

பொன்னனது மலைச்சாரலில் கீறுகள் போல் அக்காலத்தில் பதிந்திருக்கும். அவை சுனைகளினின்று விழும் அருவிகள் படத் தேய்ந்து † சிறு அணுக்க

* நீதி வானவர் நித்தல் நியமஞ்செய்
தோதி வானவ ரும்முண ராததோர்
வேதி யா! விகிர் தா! திரு வீழியு
ளாதி யே! யடி யேனைக்கு றிக்கொளே!

திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை 7.

* "காச்சி லாதபொன் னோக்கும் கனவயிரத் திரள்
ஆச்சிலாத பளிங்கின னஞ்சுமு னோடினான்
பேச்சினாலுமக் காவதென்? பேதைகாள் பேணுமின்
வாச்ச மாளிகை சூழ்மழப் பாடியை வாழ்த்துமே"

சம்பந்தர்.

† "இரும்பொனின் மலைவிலி னெரிச ரத்தினால்
வரும்பு ரங்களைப் பொடிசெய்த மைந்தனூர்
சுரும்பமர் கொன்றையுந் தூய மத்தமும்
விரும்பிய சடையணல் விசய மங்கையே"

சம்பந்தர்.

"இரும்பொன் மலைவில்லா வெரியம்பா நாணில்
திரிந்தபுர மூன்றுஞ் செற்றானுறை கோயில்
தெரிந்த வடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி யெதிர்கொள்வார் வீழிமிழ லையே"

ளாய் நீரிற் கலந்துவரும். அவ்வாறு வரும் ஓடைகளிற் குளிப்போர் தேக வினை நீங்குவது திண்ணம்.

களிம்பு (Verdigris) நீங்கிய செம்பும் பொன்னுகும். இத்தத்துவத்தை மேல்நாட்டு ரசாயன வாதிகள் இன்னும் அறிந்திலர். அணுக்களின் பளுவினுலும், (Atomic Weight) நீரில் இடை குறையும் தத்துவத்தாலும் (Specific Gravity) செம்பானது, பொன்னிலக்கணத்திற்குச் சிறிதே குறையும். இக்களிம்பை நீக்கிய பொன், மற்றப் பொன்களைவிட மருந்திற் சிறந்ததாகுமென்பர் பண்டிதர். எனவே தாம்பிர பஸ்மமானது தங்கபஸ்மத்தைக் காட்டிலும் மேலான குணம் காட்டும். பைம்பொன்னுக்கும், இச்செம்பொனுக்கும் அப்பர் பேதம் அறிந்தவரென்பதற்கு ஐயமில்லை. சிவபெருமானைச் செம்பொன் ‡ என வர்ணிக்கும்போதெல்லாம்,' அதற்கு நிறத்திலொத்த பவளக் குன்றெனப் பாடுவதைக் கவனிக்க.

உலோகங்களில் இரண்டாவதாகக் கொள்வது வெள்ளி. இதைப் பஸ்மம்செய்து மருந்துகளில் கலப்பர். சுத்தமாக முறைப்படி காராம் பசுவின் சாணத்தினின்று செய்த திருநீறு வெள்ளியின் அணுக்கள் கலக்கப்பெற்றிருக்கு மென்பர். இதனல் " ஏலவுடம் பிடர்தீர்க்கு மின்பந்தருவது நீறு" எனச் சம்பந்தர் கூறினர் போலும். அப்பரும் திருநீற்றின் தன்மையை அடியிற்கண்ட பாசுரத்தில் காட்டுவது காண்க:—

புள்ளி கொண்ட புலியுரி யாடையும்
வெள்ளி கோண்டவெண் பூதிமெய் யாடலும்
நள்ளி தண்டிரை நாரையூ ரானஞ்சை
யள்ளி யுண்டலு மம்ம வழகிதே.

திருநாரையூர் - திருக்குறுந்தொகை 2.

சுத்தமாக முறைப்படி செய்த திருநீறு வெள்ளிப் பொடியைப்போல் பளபளப்பாயிருக்கும்:—

வெள்ளிக் குழைத்துணி போலுங்
கபாலத்தன் வீழ்ந்திலங்கு
வெள்ளிப் புரியன்ன வெண்புரி
நூலன் விரிசடைமேல்
வெள்ளித் தகடன்ன வெண்பிறை
சூடிவெள் ளென்பணிந்து
வேள்ளிப் பொடிப்பவ ளப்புறம்
பூசிய வேதியனே.

தனித் திருவிருத்தம் 1.

கைலாய பர்வதத்தை வெள்ளிமலை யென்பதுண்டு. இமயமலையில் வெள்ளிக்கனி அக்காலத்திலிருந்ததாலோ, அல்லது அதன்மேலுள்ள பனிக்கட்டிகள் வெள்ளிபோல் வெளிச்சத்தில் காணப்படுவதாலோ, வெள்ளியங்கிரி எனப்படும்:—

வெள்ளி மால்வரை போல்வதோ ரானையார்
உள்ள வாறெனை யுள்புகு மானையார்
கொள்ள மாகிய கோயிலு ளானையார்
கள்ள வானை கண்டீர்கட வூரரே.

திருக்கடவூர் வீரட்டம் - திருக்குறுந்தொகை. 2.

தங்கத்தைக் காட்டிலும் வெள்ளி மிகவும் காரமான மருந்து. நரம்பு எலும்பு முதலிய தாதுக்களை வலிவு செய்வதற்கு இது பயன்படும். சுத்தமான வெள்ளியை உலகவழக்கில் சொக்கவெள்ளியென்று பகர்வது காண்க. சொக்கனைப்போல் திகழும் வெள்ளி யென்பர் சிலர். இது மிகவும் உரமானது.

மூன்ருவது, உலோகங்களில் பஸ்மம்செய்து பயன்படுத்தக் கூடியது நாகம். இதைத் துத்திநாகம் என்று வழங்குவர் (Zinc). இது வெள்ளிக்குச் சமானமான உரத்தை யுடையது. இதன் ஸ்புடம் முறை தெரிந்தவர்கள் அடியிற் காணும் அப்பர் பாசுரமும், அதுபோன்ற சம்பந்தர் பாசுரமும், இவ்விருவரின் வைத்தியக்கலை விளக்கம் என்றே கொள்ளுவரன்ரே?

வேவ்வ வண்ணத்து நாகம் வெருவவே
கவ்வ வண்ணக் கனல்விரித் தாடுவர்
சேவ்வ வண்ணந் திகழ்திரு மீயச்சூர்
எவ்வ வண்ணம் பிரானிளங் கோயிலே

திருமீயச்சூரிளங்கோயில் - திருக்குறுந்தொகை.

விண்ணின் மின்னேர் மதிதுத்தி நாகம்
விரிபூ மலர்க்கொன்றை
பெண்ணின் முன்னேமிக வைத்துகந்த
பெருமா னெரியாடி
நண்ணிய தன்னடி யார்களோடுந்
திருநாரை யூரனென்
றெண்ணுமினும் வினைபோகும் வண்ண
மிறைஞ்சு நிறைவாமே.

சம்பந்தர்..

இப்பாசுரங்களில் நாகம் என்பது துத்திநாக உலோகத்தை வெளிப்படையில் குறிக்காது சிவபெருமான் அணியும் நாகத்தையே காட்டினும், இவ்விருவருடைய சொற்ருெடர்கள் துத்திநாகத்தைப் புடம்வைக்கும்போது உள்ள கஷ்டங்களை விளக்குவதுபோல் அமைந்திருப்பன காண்க. கீழ்வரும் அப்பர் பாசுரங்களைச் சித்தர் பரிபாஷையால், நாகம், வெள்ளீயம் முதலியன வகைப்படும் சுருதிகளை ஆராய்க:—

" நாகத்தை நங்கை யஞ்ச
நங்கையை மஞ்ஞை யென்று
வேகத்தைத் தவிர நாகம்
வேழத்தி னுரிவை போர்த்துப்
பாகத்தி னிமிர்தல் செய்யத்
திங்களை மின்னென் றஞ்சி
யாகத்திற் கிடந்த நாக
மடங்குமா ரூர ஞரே." என்றும்

* * *

நஞ்சிருள் மணிகொள் கண்டர்
நகையிரு ளீமக் கங்குல்
வெஞ்சுடர் விளக்க தாடி
விளங்கினர் போலு மூவா
வெஞ்சுடர் முகடு தீண்டி
வேள்ளிநா ராச மென்ன
வஞ்சுட ரணிவெண் திங்க
ளணியுமா ரூர ஞரே.
எந்தளிர் நீர்மை கோல
மேனியென் றிமையோ ரேத்தப்
பைந்தளிர்க் கொம்ப ரன்ன
படர்கொடி பயிலப் பட்டுத்

† நம்பனே யெங்கள் கோவே நாதனே யாதி மூர்த்தி !
பங்கனே பரமயோகி ! யென்றென்றே பரவி நாறுஞ்
சேம்போனே பவளக்குன்றே திகழ்மலர்ப்பாதங்காண்பான்
அம்பொனே யலேந்து போனே னதிகைவீ ரட்ட ஞரே

திருவதிகை திருவீரட்டம்-திருநேரிசை 1.

தஞ்சடைத் தோத்தி ஞலுந்
தம்மதோர் நீர்மை யாலும்
மந்தளி ராகம் போலும்
வடிவரா ரூர ஞரே.

திரு ஆரூர் , திருநேரிசை 2, 4, 5.

நாராச மென்பது ஈயம் (Lead). தகரம் அல்லது வெள்ளீயம் (Tin). ஈயத்தில் ஒருவகைத்தென நமது நாட்டு வைத்தியசாஸ்திரிகள் இதைக் கொண்டிருந்தனர். ஆயினும் அவை வேறுவேறு உலோகங்களென மேல்நாட்டு ரசாயன சாஸ்திரிகள்கூறுவார். வங்க பஸ்பமானது தோலின்கண் உள்ள துஷ்ட கிருமிகளை யொழித்து இரத்தத்திற்கு எற்றம் தரும்.

எனவே உலோகங்களில் நெருப்பினில் கட்டுப்பட்டு நீருகக்கூடிய உலோகங்கள் ஐந்தே. அவற்றையே பஞ்ச உலோகங்களெனக் கொண்டாடுவர். அவை யாவன : பொன், வெள்ளி, செம்பு, நாகம், ஈயம் என்பனவாம். இரும்பு நீருகாத ஒருஉலோகம். இதுவும், இதனிடைக் காணப்படும் காந்தமும் ஆயுதங்களுக்கு * உரங்கொடுக்கப் பயன்படினும், வைத்தியத்தில் இது ரத்தசுத்தி செய்தற்குரிய அயச்சிந்தூரம், அயக்காந்த சிந்தூரம் முதலியன செய்யப் பயனபடுமன்றி, நரம்பு, மூளை, எலும்பு முதலியனவற்றிற்குப் பயன்படாது. நீருகும் உலோகங்களே சிவபெருமான் போல் * எவற்றிற்கும் பயன்படக்கூடியன. ஸ்புடம் வைத்தும் பரிசுத்த அறிகுறியாம் வெண்மை நிறமானது எவ்விதத்திலும் வாராத இரும்புக்கு மணிவாசகப் பெருமான் நமது மனதை ஒப்பிடுகின்ருர்:—

இருப்பு நேஞ்ச வஞ்ச னேனை
யாண்டுகொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்மடுத்தெனைக்
கலந்து போகவும்
நெருப்பு முண்டி யானு முண்டி
ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்க ணென்க
ணென்ப தென்ன விச்சையே.

திருச்சதகம்.

இரும்புதரு மனத்தேனை யீர்த்
தீர்த்தெ னென்புருகிக்
கரும்புதரு சுவை யெனக்குக்
காட்டினையுன் கழலிணைக
ளொருங்குதிரை யுலவுசடை
யுடையோனே ! நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா
றன்றேயுன் பேரருளே

திருவேசறவு,

வைத்தியத்தில் பயன்படும் மணிகள்

நவரத்தினங்களில் மருந்தாய் வழங்குவன முத்தும் பவளமுமாம். இவை யியற்கையில் சுண்ணமே (Calcium Oxides) ஆகையால், இவற்றைப் பஸ்மம் சுண்ணம் செய்வது மிகவும் எளிதாம். நீறுபூத்த நெருப்பனைய சிவபெருமானுக்கு இவற்றை அப்பர் ஒப்பிடுவதைக் காண்க.

முத்தி னைமணி யைப்பவ ளத்தோளிர்
தோத்தி னைச்சுடர்ச் சோதியைச் சோலைசூழ்
கொத்த லங்குரங் காடுது றையுறை
யத்த னென்னவண் ணித்திட் டிருந்ததே

திருக்குரங்காடுதுறை - திருக்குறுந்தொகை 2,

இவற்றைப் பக்குவஞ்செய்யும் விதங்கள் தேவாரத்தில் காணப்படவில்லை. ஏனெனில் தேவாரம் வைத்திய நூலன்று. வைத்தியக் கலையில் வல்லோர் பாடும் பாடல்களில் அவரை யறியாது வெளியாகும் சில உண்மைகளையே நாம் வரையக்கூடும்.

ஆதலால் பற்பல மூலிகைகள் அவற்றின் குணங்கள் தேவாரவாயிலாய்க் காணக்கூடிய விடங்களில்லை. செந்தாமரை வெண்டாமரை முதலிய மலர்கள், தேன் முதலிய மலைச்சரக்குக்கள் ஆகிய இவற்றின் இயற்கை இலக்கணத்தை விரிக்குங் காலையில் காட்டப்படும் சொற்ருெடர்களால் சிறிது அறிவதன்றி மருந்துகளின் முறையில் நாம் அவற்றைக் காண்கிலோம். இனிநாம் காணக்கூடியது, தாயுமானவர் வாக்கில் கூறியவாறுபோல்

செகத்தை யெல்லாம் அணுவளவும் சிதரு வண்ணம்
சேர்த்தணுவில் வைப்பை அணுத் திரளையெல்லாம்
மகத்துவமாப் பிரமாண்ட மாகச் செய்யும்
வல்லவா நீ நினைந்த வாறே யெல்லாம் !

* (i) இநம்பார்ந்த சூலத்த னேந்தியோர்
வெண்மழுவ னென்கின் ருளாற்
சுரும்பார் மலர்க் கொன்றைச்
சுண்ணவெண்ணீற் றவனேயென் கின்ருளால்
பெரும்பால னுகியோர் பிஞ்ஞக
வேடத்த னென்கின் ருளாற்
கரும்பானல் பூக்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

திருக்கழிப்பாலை - பண் - காந்தாரம். 4,

(ii) " இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னுனை
யிறையவனை மறையவனை யெண்குணத்தி னுனைச்
சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ் சூடுஞ்
சடையானை விடையானைச் சோதியெனுஞ் சுடரை
அரும்புயர்ந்த வரவிந்தத் தணிமலர்க ளேறி
யன்னங்கள் விளையாடு மான்றுறையி னருகே
கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனி
கானட்டு முள்ளூறிற் கண்டுதொழு தேனே"

சுந்தரர்.

* மூவகை மூவர் போலும் முற்றுமா நெற்றிக் கண்ணர்,
நாவகை நாவர் போலு நான்மறை ஞான மெல்லா
மாவகை யாவர் போலு மாதிரை நாளர் போலும்
தேவர்கள் தேவர் போலுந் திருப்பயிற் றூர ஞரே.

திருப்பயிற்றூர் - திருநேரிசை 5.

* மாசார் பாசம யக்கறு வித்தேனுள்
நேச மாகிய நித்தன் மணாளனைப்
பூச் நீர்க்கடு வாய்கரைத் தென்புத்தூர்
ஈச னேயென வின்பம தாயிற்றே.

கடுவாய்க்கரைத் திருப்புத்தூர் - திருக்குறுந்தொகை 8.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[47-வது பக்கத் தொடர்ச்சி]

2. நகரச் சருக்கம்.

35. சொன்னநீர் வளமைத் தாய
சுரமைநாட் டகணி சார்ந்து
மன்னன்வீற் றிருந்து வைக
நூலவர் வகுக்கப் பட்ட
பொன்னவிர் புரிசை வேலிப்
போதன மென்ப துண்டோர்
நன்னகர் நாக லோக
நகுவதொத் தினிய தொன்றே. 1.

சொன்ன - முன்சொன்ன, நீர்வளமைத்து ஆய - நீர்வளப்பத்தை உடையது ஆகிய, சுரமை நாட்டு - சுரமை நாட்டினது, அகணி - மருதநிலத்தை, சார்ந்து - சார்ந்து, நூலவர் - சிற்பநூல் வல்லவர்களால், வகுக்கப்பட்ட - நிருமிக்கப்பட்ட, பொன் அவிர் - பொன் விளங்குகின்ற, புரிசை - மதிலை, வேலி - (தனக்கு) வேலியாக உடைய, போதனம் என்பது - போதனம் என்னும், ஓர் நல்நகர் - ஒரு நல்ல நகரம், மன்னன் வீற்றிருந்து வைக - அரசன் அமர்ந்து வசிப்பதற்கு, உண்டு - (அமைந்து) உள்ளது. (அது) நாகலோகம் - நாகலோகத்தை, நகுவது ஒத்து - (தனக்கிணையன்று என்று இகழ்ந்து) சிரிப்பதை ஒத்து, இனியது - பல இன்பங்கள் வாய்ந்ததான, ஒன்று - ஒரு நகரமாம்.

சொன்னது நீர் வளமைத்து-சுவர்ணத்தின் தன்மையதான வளமையையுடையது, என்று முன் 'பொன் நரலு நாடதே' என்றதற் கிணங்கப் பொருள்கூறினுமமையும். வீற்றிருந்து - வீறோடு இருந்து - (வீறு - வேறொன்றிற்கு மில்லாத சிறப்பு) பெரும் சிறப்போடமர்ந்து வசிக்க, எனவு முரைக்கலாம். நாகலோகம் என்பது சுவர்க்கலோகம், சர்ப்பலோகம், இரண்டிற்கும் பொது. ஒவ்வாதெனும் கருத்தில் 'நகுதல்' வருவதுண்டு. 'பன்னகமு நகு வெள்ளிப் பனிவரை' என்று இமயமலையைக் கம்பர் வருணிக்கின்றார்.

---

36. சங்கமேய் தாங்க வேலித்
தடங்கடற் பொய்கை பூத்த
வங்கண்மா ஞால மென்னுந்
தாமரை யலரி னங்கேழ்ச்
செங்கண்மால் சுரமை யென்னுந்
தேம்பொகுட் டகத்து வைகு
நங்கையார் படிவங் கொண்ட
நலத்தது நகர மன்றே. 2.

சங்கம் - சங்குகள், மேய் - மேய்கின்ற, தரங்கம் - அலைகளை, வேலி - (ஓரத்தில்) வேலியாக உடைய, தட - பெரிய, கடல் - கடலாகிய, பொய்கை - தடாகத்தில், பூத்த - மலர்ந்த, அம் கண் மா ஞாலம் என்னும் - அழகிய இடமகன்ற பெரிய பூமி என்னும், தாமரை அலரின் - தாமரைப்பூவின், செம்கண்மால் சுரமை என்னும் - சிவந்த கண்களை உடைய திருமால் (வந்து பிறந்த) சுரமைநாடு என்னும், அம் கேழ் - அழகாகிய நிறமமைந்த, தேம் பொகுட்டு அகத்து - வாசனையுடைய கொட்டையினுள், வைகும் - வசிக்கும், நங்கையார்- பெண்களிற் சிறந்த திருமகள், படிவம் கொண்ட - (ஒரு நகரத்தின்) உருவத்தைக் கொண்டது போன்ற, நலத்தது - நலமுடையது, நகரம் - அந்தப் போதனம் என்னும் நகரம், அன்றே—அசை.

கடலைத் தடாகமாகவும் உலகை யதிற்பூத்த தாமரையாகவும் சுரமைநாட்டை அத்தாமரையின் கொட்டையாகவும் போதனநகரை யக்கொட்டையின்கண் இருக்கும் இலக்குமியாகவும் இச்செய்யுள் உருவகஞ் செய்கின்றது. திருமாலே இக்கதைக்கு நாயகனை திவிட்டனாய்ப் பிறந்தானாதலால் செங்கண்மால் சுரமை யென்றார்.

மூன்றாமடியின் ஈற்றுச் சொல்லாகிய 'வைகும்' என்பது பொருளோடு பொருந்தி அமைந்திலது. சுரமை யென்னும் தேம்பொகுட்டு அகத்தில் வைகுவாளல்லள் திருமகள். அவள் தாமரையில் வைகுபவள். ஆனல் இச்செய்யுளில் இருக்கும் 'தாமரை அலர்' என்பது ஞாலத்தைக் குறித்து நிற்பதால் 'வைகும்' என்னும் சொல் அதனோடு சேராது. ஆயின், செங்கண்மால் அகத்து வைகும் நங்கையார், எனக் கூட்டித் திருமாலின் மார்பில் வாழும் திருமகள் எனப் பொருள் கொள்ளிலோ, பிறகு அத்தொடர் 'படிவம் கொண்ட நலத்தது' என்பதனோடு இயைவதற்கில்லை. 'தேம் பொகுட்டின் படிவம் கொண்டது' என்றே கூடும். எனின் திருமகளுக்கு இச்செய்யுளி லிடமே யில்லாமற் போய்விடுகின்றது. தாமரை என்னும் சொல் வந்ததால் சிறிது மயங்கியே, 'வைகு'மெனத் தெளிவறக்கவி கூறிவிட்டாரென்று எண்ணுதற்கிடமுளது.

---

37. செஞ்சுடர்க் கடவு டிண்டே
ரிவுளிகா றிவள வூன்று
மஞ்சுடை மதர்வை நெற்றி
வானுழு வாயின் மாடத்
தஞ்சுட ரிஞ்சி யாங்கோ
ரகழணிந் தலர்ந்த தோற்றம்
வெஞ்சுடர் விரியு முந்நீர்
வேதிகை மீதிட் டன்றே 3.

செம்சுடர் கடவுள் - சிவந்த கிரணங்களையுடைய கடவுளாகிய சூரியனது, திண் தேர் - வலியமைந்த தேரில், இவுளி - (பூட்டிய) குதிரைகள், கால் - (தம்) கால்கள், திவள - இளைப்படைய, ஊன்றும் - (அவ்விளைப்பு ஆறுமாறு சிறிது) ஊன்றுவதற்கிடமான, மஞ்சு - சிகரத்தை, உடை - உடைய, மதர்வை - (பார்ப்போர்க்கு) மயக்கம் விளைக்கும், நெற்றி - மேலிடத்தை யுடைய, வாயில் - கோபுர வாயில்களின் மேல் கட்டியுள்ள, வான்உழு - ஆகாயத்தைப் பிளந்து அப்பால் செல்லும், மாடத்து - கோபுரங்களை உடைய. அம்சுடர் இஞ்சி - அழகிய ஒளியமைந்த (பொன்னாலாகிய) மதில், ஆங்கு - அந்நகரில், ஓர் அகழ் அணிந்து - அகழியொன்று தன்னைச் சூழ, அலர்ந்த தோற்றம் - மலர்ந்து விளங்கும் காட்சியானது (எப்படி

இருந்த தென்றால்,) வெம்சுடர் - விருப்பத்தைத் தருகின்ற சுடருடையதாகிய சூரியன், விரியும் - கிரணங்களைப் பரப்பி உதிக்கின்ற, முந்நீர் மீது-கடலின் மீது, வேதிகை - (அச்சூரியன் தங்கிச் செல்வதற்கு ஒரு) திண்ணையை, இட்டன்று - கட்டிவைத்ததைப் போன்றது.

சூரியனது குதிரைகள் தம் காலின் நோவை ஆற்றிக்கொள்ளுமாறு சிகரத்தில் சிறிது ஊன்றிப் பிறகு செல்லும்படி அவ்வளவு உயர்ந்த சிகரத்தையுடைய கோபுரங்கள் வாய்ந்த மதிலானது கடல்போன்ற அகழிசூழ நிற்பது கதிரவன்உதிக்குங் கடல்மீது ஒரு திண்ணை யமைந்திருப்பதைப் போன்றிருந்தது என்பது இச்செய்யுளின் கருத்து. இது சம்பந்தமில்லாதற்குச் சம்பந்தம் கற்பித்த தொடர்பு உயர்வுநவிற்சியணி.

இவுளிகால் திவிள ஊன்றும் என்னுந் தொடர், குதிரைகளின் கால்கள் கோபுரத்தில் இடற அதனல் நொந்து பிறகு நொண்டி நொண்டிச் செல்லும், எனப் பொருள்தருமாயினும், எல்லா நலத்திற்கு மிடமாய அந்நகர கோபுரம் கதிரவன் குதிரைகளின் கால் உடைவதற்குக் காரணமாயிருக்கும் பொருள் ஒவ்வாதென்று விடுத்தோம்.

மதர்வை நெற்றி - உயரத்தின் அளவுகடந்த தன்மையால் பார்ப்போர் மனம் மருண்டு மயக்கந் தரும் மேலிடம். இக்கருத்து 'Giddy heights' என்னும் ஆங்கிலத் தொடரிலும் வருவது காண்க. மதர்வை என்னும் சொல் மயக்கம் எனும் பொருளில், 'மருப்பிளம் பிறைநுதன் மதர்வை வெங்கதிர்' எனச் சிந்தாமணியடியில் வரக்காணலாம்.

மஞ்சு, என்றதற்குச் சிகரம் என்றல்லாது மேகம் அல்லது அழகு எனப் பொருள்கொள்ளினும் பிழையில்லை.

வெஞ்சுடர், என்பதனின் வெம்என்பது உரிச்சொல்.

---

38. இரும்பிடு தொடரின் மாவி
னெழுமுதற் பிணித்த யானைக்
கரும்பிடு கவள மூட்டுங்
கம்பலை கலந்த காவி
னரும்பிடை யலர்ந்த போதி
னல்லியுண் டரற்று கின்ற
சுரும்பொடு துதைந்து தோன்றுஞ்
சூழ்மதி லிருக்கை யெல்லாம். 4.

இரும்பு இடு - இரும்பினல் ஆகிய, தொடரின் - சங்கிலியால், மாவின் - மரங்களிலும், எழுமுதல் - தூணிலும், பிணித்த - கட்டிய, யானை - யானைகளுக்கு, கரும்பு இடு கவளம் - கரும்பு இட்ட கவளத்தை, ஊட்டும் - (பாகர் அதட்டி) ஊட்டுவதால் எழும், கம்பலை - ஆரவாரம், கலந்த - சேர்ந்த, காவின் - (மதிலிற் குட்புற மமைந்த)சோலையில், அரும்பு இடை அலர்ந்த - அரும்புகளை நடுவே பெற்று மலர்ந்த, போதின் - மலர்களின், அல்லி - மகரந்தத்தை, உண்டு - தின்று, அரற்றுகின்ற - ஒலிக்கின்ற, சுரும்பொடு - வண்டுகளோடு, துதைந்து - அடர்ந்து, சூழ் மதில் இருக்கை எல்லாம் - சூழ்ந்த மதிலிட மெல்லாம், தோன்றும் - விளங்கும்.

எழுமுதல், என்பதின் முதல் ஏழனுருபு.

---

39. மானளா மதர்வை நோக்கின்
மையரி மழைக்க ணார்தந்
தேனளா முருவக் கண்ணிச்
செல்வர்தோ டிளைக்கு மாடங்
கானளாங் காம வல்லி
கற்பகங் கலந்த கண்ணன்
வானளாய் மலர்ந்து தோன்று
மணிவரை யனைய தொன்றே. 5.

மான் அளாம் - மானின் தன்மை கலந்த, மதர்வை - மருட்சியுடைய, நோக்கின் - பார்வையோடு, மை அரி - மையும் வரிகளும் படர்ந்த, மழை - குளிர்ந்த, கணார் - கண்களையுடைய மாதர், தம் - தமது, தேன் அளாம் - தேன் சேர்ந்த, உருவ - வடிவமைந்த, கண்ணி - மாலை சூடிய, செல்வர் - நாயகர்களது, தோள் - தோள்களோடு, திளைக்கும் - முயங்கும், மாடம் - மாளிகை, கான் அளாம் - வாசனையோடு கூடிய, காமவல்லி - காமவல்லியானது, கற்பகம் - கற்பகத்தருவை, கலந்த - சேர்ந்த, கண்ணன் - பெருமையோடு, வான் அளாய் - வானத்தை அளாவி, மலர்ந்து - விளங்கி, தோன்றும் - காணப்படுகிற, மணிவரை - அழகிய மலையை, அனையது - போன்றது, ஒன்றே - ஒவ்வொன்றுமாம்.

கற்பகமும் அதன்மீது படரும் காமவல்லியும் முளைத்த மலையொன்றுண்டாயின் அதனை,நாயகரைத் தழுவி மாதர் வைகும் மாடங்களுக்கு உவமையாகக் கூறலாம் என்பது இச்செய்யுளின் கருத்து. இல்பொருளுவமை யணியாகும்.

அளாவும் என்பது அளாம் என நின்றது. அளாவுதல் - கலத்தல், சேர்தல். மான் அளாம் என்பதிலுள்ள அளாம் என்பதை உவமவுருபாகவுங் கொள்ளலாம். கண்ணன் - கண் என்பது இங்குப் பெருமை என்னும் பொருளில் வந்தது. ஆன் உருபை கருவிப் பொருளிற் கொள்ளாது 'ஓடு' என மாற்றிப் பொருள் கண்டோம்.

வேறு.

40. அகிலெழு கொழும்புகை மஞ்சி னாடவு
முகிலிசை யெனமுழா முரன்று விம்மவுந்
துகிலிகைக் கொடியனார் மின்னிற் றோன்றவு
மிகலின மலையொடு மாட மென்பவே. 6.

மாடம் - (அந்நகர) மாளிகைகள் (உயரத்தில் மாத்திரமேயன்றி), அகில் எழு - அகிலினின்று எழுகின்ற, கொழும்புகை - அடர்ந்த புகை, மஞ்சின் - மேகம் போல், ஆடவும் - (அதனருகில்) திரிவதாலும், முகில் - மேகத்தின், இசை என - ஒலியைப்போல், முழாம் - மத்தளங்கள், முரன்று - ஒலித்து, விம்மவும் - (அதனின்று) மிகுதலாலும், துகிலிகை கொடியனார் - சித்திரக்கொடி போன்ற மாதர், மின்னின் - மின்னலைப்போல, தோன்றவும் - (அதன் கண்) தோன்றுதலாலும், மலையோடு - மலைகளோடு, இகலின - மாறுகொண்டன, (அதாவது மலைகளை யொத்தன)—என்பவே - அசை.

மலைக்கும் மாடத்திற்கும் இருக்கும் பொருத்தத்தைக்காட்டி உவமைகூறியதால் இது ஏதுவுவமையணி. மஞ்சு என்பதற்கு வெண்மேகமெனப் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். அகிற்புகை வெண்மையாயிருத்தலால் மஞ்சுபோன்றது. தம் கூந்தற்கும்

ஆடைக்கும் மாடத் துள்ளிடத்திற்கும் மாதர் அகிற் புகையூட்டுவர். இன் உருபுகளெல்லாம் ஐந்தாம் வேற்றுமை ஒப்புப்பொருளன. மஞ்சின் நாடவும், எனப் பிரித்து மேகம்போல் நெருங்கிச் சூழவும், என்று பொருள் சொள்ளினு மமையும்.

---

41. கண்ணெலாங் கவர்வன கனக கூடமும்
வெண்ணிலாச் சொரிவன வெள்ளி வேலியுந்
தண்ணிலாத் தவழ்மணித் தலமுஞ் சார்ந்தரோ
மண்ணினு லியன்றில மதலை மாடமே. 7.

மதலை - தூண்களுடைய, மாடம் - மாளிகைகள், கண் எலாம் - (பார்ப்போர்களது) - கண் முழுதும், கவர்வன - கவர்வனவான, கனக கூடமும் - பொன் மயமான உள்ளிடமும், வெண் நிலா சொரிவன - வெண்மையான ஒளியை வீசுவனவான, வெள்ளி வேலியும்,—வெள்ளியாலாகிய புறச்சுவர்களும், தண் நிலா - குளிர்ந்த நிலவுபோல், தவழ் - (ஒளி) பரப்புகின்ற, மணி - படிகக் கற்களாலாகிய, தலமும்-தரையிடமும், சார்ந்து - கலந்திருத்தலால், மண்ணினால் - மண் (கல் சுதை போன்ற சாதாரணப் பொருள்களால்), இயன்றில - கட்டப்பட்டன அல்ல. அரோ, அசை.

மதலை என்பதற்கு எழுதகம் (Cornice) அல்லது சுவரின் வளைவு (Arch) என்று பொருள்கொள்ளினு மமையும். தவழ் - பரத்தல் என்னும் பொருளில் 'இழைதவழ் மார்பன்' என்று சிந்தாமணியிலும் வந்திருக்கின்றது. தவழ் மணி-இங்குப் பிறவினை வினைத்தொகை.

அந்நகரின் செல்வமிகுதியைக் கூறுவதால் இச்செய்யுள் வீறுகோளணி. "புதுப்புனல் குடையுமாதர் பூவொடு நாவிபூத்த கதுப்புறு வெறியே நாறுங் கருங்கடற் றரங்கம்" என வரும் கம்பராமாயணச் செய்யுளும் இவ்வணியாம்.

---

42. மாடவாய் மணிமுழா விசையு மங்கைய
ராடுவார் சிலம்பிணை யதிரு மோசையும்
பாடுவார் பாணியும் பயின்று பல்கல
மூடிமா ணகரது முரல்வ தொக்குமே. 8.

மாடவாய் - மாடங்களில், மணிமுழா - அழகிய மத்தளங்களின், இசையும் - சப்தமும், ஆடுவார் - நடனமாடுகின்ற, மங்கையர் - பெண்களின், சிலம்பு இணை - இருசிலம்புகளும், அதிரும் - அதிர்கின்ற, ஓசையும் - ஓசையும், பாடுவார் - பாடுகின்றவர்களது, பாணியும் - கைத்தாளமும், பயின்று - பொருந்தி, மாண்நகரது - மாட்சிமைப்பட்ட அங்கரத்தில், பல்கலம் - பலவிதமான ஆபரணங்கள், ஊடி - தம்முள் மாறுபட்டு, முரல்வது - ஒலிப்பதை, ஒக்கும் - நிகர்க்கும்.

ஆபரணங்களாலெழு மொலியைச் சிஞ்சிதம் என்பர். அவை ஒன்றோடொன்று பட்டும் குலுங்கியும் உண்டாகும் ஒலிபோல் மத்தளம் சிலம்பு தாளம் முதலியன ஒலித்தனவென்பது இச்செய்யுளின் கருத்து. பாணி என்பதற்குப் பாட்டு என்னும் பொருளும் இச்செய்யுளில் ஒருவாறு பொருந்தலாம்.

---

43. தாழிவாய்க் குவளையுந் தண்ணெ ணோதியர்
மாழைவா ணெடுங்கணு மயங்கி வந்துசென்
றூழிவார் மின்குர லாலித் தார்த்தரோ
வேழைவாய்ச் சரும்பின மிளைக்கு மென்பவே. 9

தாழிவாய் - ஜாடிகளில் (அலங்காரமாய் வைத்துள்ள), குவளையும் - குவளைமலரிற்கும், தண் என் ஓதியர் - குளிர்ச்சிபொருந்திய கூந்தலையுடைய மாதர்களது, மாழை - மாவடுவைப்போன்றதும், வாள் - வாளைப்போன்றதும் ஆன, நெடும் கணும் - அகன்ற கண்களிற்கும், மயங்கி - (வேற்றுமையறியாது) மயங்கி, வந்து சென்று - ஒன்றைவிட்டொன்றிற்கு வந்தும் சென்றும், ஏழை வாய் சுரும்பினம் -(தேன் பெறாது) ஏழைமை யடைந்த(வெறும்)வாயுடையவைகளான வண்டின் கூட்டம், ஆழி வார் மின் - வட்டமான நீண்ட ஒளிபொருந்திய, குரல் - சிறகுகளால், ஆலித்து ஆர்த்து-திரிந்து ஆரவாரம் செய்து, இளைக்கும்-சோர்வடையும்—அரோ, என்பவே, அசைகள்.

தாழ்ந்திருப்பது தாழியாகக் குளமெனப் பொருள் கொள்ளலாம் எனினும் மாடங்களை வருணிக்கும் பாகத்தில் இச்செய்யுள் வருவதால் தாழிவாய்க்குவளை என்றதற்குப் பூப்பெய்து அலங்காரமாய்க் கூடத்தில் வைக்கும் (Flower vase) சாடியிலுள்ள குவளை எனப் பொருள் கொண்டோம். குளத்திற்கும் மாடத்திற்கும் வண்டுகள் மாறிமாறிப் பறந்திளைத்தன வென்பதும் பொருந்தும்.

குவளையைப்பார்த்துக் கண்ணோ வென்றும் கண்ணைப் பார்க்குங்கால் குவளையோ வென்றும் ஒருவிதமும் தெளியாமல் இடையே திரிந்து வண்டுகள் ஐயமுறுவதால் இச்செய்யுள் ஐயவணி. மயக்கவணியாயின் குவளையென்றே வண்டு கண்ணிற்படிந்திருத்தல் வேண்டும். 'மயங்கி' என்னும் சொல் வந்தகாரணத்தினாலேயே இது மயக்கவணியென்று எண்ணற்க.

---

44. பளிங்குபோழ்ந் தியற்றிய பலகை வேதிகை
விளிம்புதோய் நெடுங்கடை வீதி வாயெலாந்
துளங்குபூ மாலையுஞ் சுரும்புந் தோன்றலான்
வளங்கொள்பூங் கற்பக வனமும் போலுமே.10.

நெடும் கடைவீதிவாய் எலாம் - பெரிய கடைவீதியில் எல்லாம், பளிங்கு - ஸ்படிகக் கற்களை, போழ்ந்து - பிளந்து, இயற்றிய - ஆக்கிய, பலகை - பலகைகளையுடைய, வேதிகை - மேடைகளின், விளிம்பு -ஓரங்களில், தோய்-பொருந்திய, துளங்கும்-அசைகின்ற, பூமாலையும் - பூமாலைகளும், சுரும்பும் - வண்டுகளும், தோன்றலால் - தோன்றுவதால், (அக்கடைவீதி) வளம் கொள் - செல்வம் மிகுந்த, பூ கற்பக வனமும் - மலர்களையுடைய கற்பகச் சோலையையும், போலும் - ஒக்கும்.

கற்பகத்தினிடத்தில் வேண்டியவர் வேண்டியன பெறுமாறு இக் கடைவீதியிலும் பெறலாம் என்பது கருத்து. 'கயலெனப் பிறழுங் கண்ணாள்' என்பதிற்போல இச்செய்யுளில், கற்பகவனமாகிய உபமானமும் கடைவீதியாகிய உபமேயமும் போலும் எனும் உவமச்சொல்லும், பூமாலையும் வளமும்ஆகியபொதுத் தன்மையும் விரிந்து வந்திருத்தலால் விரியுவமையணி. கற்பக வனமும் என்பதன் உம்மை உயர்வு சிறப்பு. வேறு வருணனை கடைவீதிக்கு இல்லையாதலால் இது எச்சப்பொரு ளாகாது.

---

45. காவிவாய்க் கருங்கணார் காமர் பூஞ்சிலம்
பாவிவாய் மாளிகை யதிரக் கேட்டொறுந்
தூவிவான் பெடைதுணை துறந்த கொல்லென
வாவிவா யிளவன மயங்கு மென்பவே. 11.

காவிவாய் - காவிமலர் போன்ற, கருங்கணார் - கருமையான கண்களுடைய மாதர்களது, காமர்-அழகிய, பூ சிலம்பு - பொலிவமைந்த சிலம்புகள், ஆவிவாய்- (அகிற்) புகைவாய்ந்த, மாளிகை-மாடங்களுள், அதிர - அதிர்வதை, கேள் தொறும்- கேட்கும் போதெல்லாம், தூவி வான் பெடை - சிறகின் சிறப்பமைந்த பெண் அன்னம், துணை - தனது துணையை, துறந்த கொல் என - துறந்தனவோ என்று, வாவி வாய்-தடாகங்களிலுள்ள, இள அன்னம் - இளஅன்னங்கள், மயங்கும் - திகைக்கும். என்பவே—அசை.

துணைபிரிந்த பெடை அரற்றுகின்றதோவென்று மாதர் சிலம்பொலி கேட்டு அன்னங்கள் ஐயம்கொள்வதால் இது ஐயவணி. அன்னத்தின் குரல்போல் சிலம்பு ஒலிக்கும் என்பது பிரசித்தம். 'மின்னார் சிலம்பிற் சிலம்புங் குரலன்னம்' என்றார் திருத்தக்கதேவரும்.

---

46. விலத்தகைப் பூந்துணர் விரிந்த கோதையர்
நலத்தகைச் சிலம்படி நவில வூட்டிய
வலத்தகக் குழம்புதோய்ந் தரச வீதிகள்
புலத்திடைத் தாமரை பூத்த போலுமே. 12.

விலம் - நீர்நிலைகளில் உண்டாகிய, தகை - அழகிய, பூதுணர்-பூங்கொத்துக்கள், விரிந்த-மலர்ந்த, கோதையர் - கூந்தலுடைய (அல்லது மாலையணிந்த) மாதர்களின், நலம் தகை - அழகிய சிறந்த, சிலம்பு அடி - சிலம்பு அணிந்த பாதங்களில், நவில - பொருந்திப் பழக, ஊட்டிய - பூசிய, அலத்தக குழம்பு - செம்பஞ்சிக் குழம்பு, தோய்ந்து - படிதலால், அரச வீதிகள் - அரசவீதிகளின், புலத்திடை - இடங்களின் நடுவெல்லாம், தரமரை - தாமரை மலர்கள், பூத்த போலும் - பூத்தன போன்றிருக்கும்.

பிலமென்னும் வடசொல் விலம் எனத் திரிந்தது. நவில - பொருந்த அல்லது பழக என்னும்பொருளில், 'கன்னவி றோளானை' என்று புறப்பொருள் வெண்பாமாலையிலும், 'கன்னவிறோளினாய்' எனக் கம்பராமாயணத்திலும் வந்துளது.

தாமரை பூத்ததுபோல் தெருக்கள் இருப்பதற்குக் காரணம் கூறியதால் இது ஏதுவுவமையணி.

---

47. கண்ணிலாங் கடிமலர்க் குவளைக் கற்றையும்
வெண்ணிலாத் திரளென விளங்கு மாரமும்
வண்ணவான் மல்லிகை வளாய மாலையு
மண்ணன்மா நகர்க்கவைக் கரிய வல்லவே. 13.

கள் நிலாம்-தேன்பொருந்திய, கடிமலர் குவளை கற்றையும் - வாசனை பொருந்திய குவளை மலர்களின் தொகுதியும், வெண் நிலா திரள் என - வெண்மையான நிலவின் திரள்போல், விளங்கும் ஆரமும் - விளங்குகின்ற முத்துமாலையும், வண்ணம் வால் மல்லிகை - அழகிய வெண்ணிறமமைந்த மல்லிகை, வளாய - கலந்த, மாலையும் - மாலைகளும், அண்ணல் மா நகர் -சிறப்பமைந்த பெரிய (அந்தப் போதன) நகரத்தின், கவைக்கு - அக இடங்களுக்கு, அரிய அல்லவே - அருமையானவை அல்ல (மிகுதியாயுள்ளன).

கண்ணில் ஆம், எனப் பிரித்து மாதர் கண்போல் மலர்ந்த குவளை எனக் கொண்டு, பிரசித்தமான உபமானத்தை உபமேயமாகப் பெற்ற எதிர்நிலையணி என்னலாம். இரண்டாமடி விரியுவமையணி. இம்மாலைகள் மாதர்கள் ஊடி நீத்தனவா யிருத்தல் வேண்டும். நகரத்தின் செல்வப்பெருக்கைக் கூறுவதா லிச்செய்யுள் வீறுகோளணி.

'கவை' என்பது அகத்திடம் என்னும் பொருளில் வருவதைக் "கழூவிளங்காரங் கவைஇய மார்பே" என்னும் புறநானூற்றுச் செய்யுளடியாலும் அதற்குக் "கழுவி விளங்கின முத்தாரம் அகத்திட்ட மார்ப" என உரைகண்டிருத்தலாலும் தெரிந்துகொள்ளலாம். இங்குக் கவை என்பது அகநகரைக் குறிக்கின்றது.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[52-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள்-Perception)

கண்.

வெள்ளிடை முழுதும் வான் (Ether) என்பது பரவியுள்ளது. அவ்வானின் அசைவையே ஒளியாகக் காண்கின்றோம். தண்ணீரிடையே கல்லை எறிந்த போது அங்கே தண்ணீரின் அசைவைக் காண்கிறோம். அசைவு நேரே கரைக்கு வருகிறது. அதனை நேரலை எனலாம்; அவ்வசைவு குறுக்காக மேலுக்குயர்ந்து முன்னும் பின்னும் அசைகிறது. இதனைக் குறுக்கலை எனலாம். நேரலை புலனாகாமையில் தண்ணீரில் குறுக்கலைகளையே காண்கிறோம். ஒலியின் அசைவோ நேரலையாகவே விளங்குகிறது. வானின் அசைவோ குறுக்கலைகளாக எழுகின்றது. (நேரலை - Longitudinal wave; குறுக்கலை - Transverse wave) இந்த வானலைகள் (Ether waves) சிற்றலையும் பேரலையுமாக உள்ளன. இவை படிப்படியாக உயரும் ஒரு தொடர்ச்சியாக அமைந்துள்ளன. மிகப் பேரலைகளாகய் உள்ளவை நமது கண்ணுக்குப் புலனாவதில்லை. அவை வெப்ப அலைகளாய்ப் பிறபொறிகளைத் தாக்குகின்றன. மிகச் சிறிய அலைகளும் நமது கண்ணுக்குப் புலனாவதில்லை; ஆனால் அவற்றை நிழலோ

வியமாகப் பிடிப்பது கூடும். இடைநின்ற அலைகளே நமது கண்ணுக்குப் புலனாகின்றன. [இயற்கை நூலறிஞர்கள் மீடர் என்பதனை நீட்டல் அளவையாகக் கொள்வர். குறுக்கம் என்று ஓர் அளவையை வழங்குவது போல 'மீடர்' என்பதனை நெடுக்கம் என்போம். இயற்கை நூலறிஞர்கள் பத்துப் பத்தாக வரும் பத்துக் கணக்கையே கையாளுகின்றனர். கால், அரை என்ற பிரிவுகளையும் (Fractions) பத்துக் கணக்கு வகையாலே (Decimal System) விரித்து விளக்குவர். இப்பிரிவுகளைப் புள்ளியொன்றெழுதி அதன் பின்னே பத்திலோ, பப்பத்திலே அதற்கியைந்த எண்ணை அப்புள்ளியின் வலத்தே எழுதுவர். பிரிவெண்களல்லாத முழு எண்களை அப்புள்ளியின் இடப்புறத்தே எழுதுவர். அரை என்பதை இரண்டில் ஒன்றஎன மேனாட்டார் எழுதுகின்றனர். மேலே ஒன்றையும் கீழே இரண்டையும் எழுதி இடையே கோடிடுகின்றனர் $\frac{1}{2}$. இரண்டென்பதை விட்டுப் பத்து என்று சொல்வோமானால், அதற்கேற்ப ஒன்றும் ஐந்தாகும். ஆகவே புள்ளியும் புள்ளிக்கு வலமாக ஐந்தும் எழுதினால் அதனைப் பத்தில் ஐந்து என்று கொள்ளுதல் வேண்டும். பிரிவெண்களின் மேற்பிரிவைப் புள்ளியின் வலமாக வரும் எண்கள் குறிக்கின்றன; கீழ்ப் பிரிவை எவ்வாறு அறிவது? புள்ளியின் வலமாக எத்தனை எண்கள் இருக்கின்றனவோ அத்தனை இன்மைச் சுழி (Zero - பூஜ்யம்) இட்டு அவ்வின்மைச் சுழிக்கு இடத்தே ஒன்று என்ற எண்ணை எழுதினால் தோன்றும் எண்ணே கீழ்ப் பிரிவாகும். ·5 என்றபோது மேற்பிரிவு ஐந்து; ஒரே எண் இருத்தலின் ஒரு இன்மைச் சுழியே எழுதல் வேண்டும்; அதன் வலத்தில் ஒன்றை எழுதினால் பத்தென்பது தோன்றுகிறது. ஆகவே பத்தில் ஐந்து. அதாவது இரண்டில் ஒன்று, அதாவது அரை என்பதாயிற்று. ஆங்கிலேயர் ஒருவிரற்கடையை அங்குலம் அல்லது இஞ்ச் என்பர். 3937 விரற்கடை நீளமுள்ளதே ஒரு நெடுக்கமாகும். அந்நெடுக்கத்தில் பத்திலொருபிரிவைக் கீழ்ப்பத்து நெடுக்கம் என்றும், அதில் நூறிலொருபிரிவைக் கீழ்நூறு நெடுக்கம் என்றும், அதில் ஆயிரத்திலொருபிரிவை கீழாயிர நெடுக்கம் என்றும், கீழ் என்ற அடைகொடுத்து வேறுபிரிப்போமாக. ஒளியலைகளை அளப்பதற்கு இந்த நெடுக்கத்தில் நூறு கோடியில் ஒரு பிரிவையே அளவைத் தனியனாகக் (Unit) கொள்கின்றனர். எவ்வளவு சிறியதாக இருத்தல் வேண்டும் இவ்வொளி அலைகள்? [760 தனியன்களிலிருந்து 390 தனியன் வரை அளவுள்ள அலைகளே நம் கண்ணிற்குப் புலனாகின்றன.]

கதிரவனொளியைப் பன்முகக்கண்ணாடி (Prism) அல்லது பட்டைக்கண்ணாடி வழியாகச் செலுத்தினால் ஒளியலைகள் மடங்குகின்றன; திரிபொளி எழுகின்றது. இவ்வாறு மடங்கிய அலைகளை ஒரு வெள்ளைப்பொருள்மேல் விழுமாறு செய்தால் பல அளவான ஒளியலைகளின் நிழல்விழுந்து பலநிறமாகத் தோன்றுகின்றன. இந்த நிறத்தொடர் வானவில்போல் விளங்கும். விளங்கி ஒளிவில் (Spectrum) ஆகும். இவ்வாறு ஒளியைப் பலநிறமாகப் பிரித்துக் காட்டும் கருவிக்கு ஒளிவிற்பொறி (Spectroscope) என்று பெயர்.

நம்மைச்சுற்றியுள்ள காற்றின் வழியாக ஒளியானது ஓர் இமைப்பொழுதில் 300,000 தங்நெடுக்கம் செல்கிறது. [ஆயிரத்தை ஏறக்குறைய 'த' என்றும், பத்தை 'ய' என்றும், நூறை 'ற' என்றும் எழுதுகின்றதை ஒட்டிப் பத்து நெடுக்கத்தை 'யங்நெடுக்கம்' என்றும், நூறு நெடுக்கத்தை 'றங்நெடுக்கம்' என்றும், ஆயிரம் நெடுக்கத்தை 'தங்நெடுக்கம்' என்றும் வழங்குவோமாக. இவற்றை மேனாட்டார் முறையே Deka meter, Hecta meter, Rito meter, என வழங்குவர். 350,000 தங்நெடுக்கம் என்பது 200,000 கல் தொலைவிலிருக்கும் இயற்கை நூலாராய்ச்சிக்கு இன்றியமையாச் சிறப்பினதாதலின் இவ்வளவையை இங்கு விரித்தெழுதினோம்.] ஒரே வகையான எடை அல்லது அணுச்செறிவுள்ள ஊடுநிலையின் (Medium) ஊடே சிற்றலையும் பேரலையுமான ஒளியலைகள் செல்லும்போது ஒரே அளவான விரைவோடு செல்லுகின்றன. ஆனால் அவ்வாறு செல்லும்போது, குறித்த முடிவிடத்தில் வந்து சேருகின்ற அலைகளின் எண்ணிக்கைமட்டும் மாறுபடுகின்றது. பேரலைகளானால் பல வந்து சேருகின்றன. சிற்றலைகளானால் சில வந்து சேருகின்றன. செம்மைநிறத்தைத் தோற்றுவிக்கும் அலை 687 ஒளியலைத்தனியன் அளவுள்ளது. ஓரிமைப்போதில் 417,000,000,000,000,000,000 அலைகள் வந்து நம் கண்ணைத் தாக்குகின்றன. காயா நிறத்தை (Violet) தோற்றுவிக்கும் அலை 432 ஒளியலைத் தனியன் அளவுள்ளது. ஓரிமைப்போதில் 693,000,000,000,000,000,000, அலைகள்வந்து நமது கண்ணைத் தாக்குகின்றன. நமதுகண்ணைத்தாக்கும் காட்சித்தூண்டலை எவ்வாறு அளந்தறிவது? இவ்வலைகளின் எண்ணிக்கையையோ, அல்லது அவற்றின் நீளத்தையோ காட்சித்தூண்டலினை அளந்தறிவதற்கு அளவையாகக் கொள்ளலாம். ஒளியலைகளின் வேறுபாடுகள் நம் கண்ணரம்பில் வெவ்வேறு கிளர்ச்சிகளை எழுப்புகின்றன; இக்கிளர்ச்சிகள் மூளையை எட்டியபோது வெவ்வேறு காட்சிப்புலன்கள் எழுகின்றன. நாம் வேறு பிரித்தறியும் நிறங்கள் இவ்வாறே வெவ்வேறு வகையான ஒளியசைவால் எழுகின்றன. எல்லா வகையான ஒளியலைகளும் கலந்து தாக்கும்போது வெண்மைநிறம் புலனாகின்றது.

அலைகளின் நீளம் ஒருபுறம் இருக்க, அவ்வலைகளின் ஆட்டத்தையும் நாம் ஆராய்தல் வேண்டும். அலையாட்டம் மிகுதியானால், அலைகள் வரிவுடையன ஆகின்றன. இதனையே அலைகளின் உரம் (Intensity) எனலாம். அலைகள் உரத்தோடு தாக்கினால் விளக்கம் (Brightness) மிகுதிப்படுகின்றது. அலைகளின் உரம் குறைந்தால் பொருள்கள் மங்கலாகக் காணப்படுகின்றன. அலையளவும் உரமுமே யன்றி ஒளியலைக்கு இடநிலையும் (Extensity), பொழுதுநிலையும் (Duration) உண்டு. அவற்றைப் பின்னர் ஆராய்வோம்.

ஒளிப்புலனை வகைசெய்யப் புகுவோமானால், இரண்டு வேறுஇனங்களாகப் பிரிக்கலாம். ஒரேயளவுள்ள அலைகள் தாக்கியபோது எழுகின்ற காட்சிப்புலன் ஒன்று. ஈதே மிளிர்புலன்; இதனை நிறம் எனலாம். பல அளவுள்ள அலைகள் ஒருங்கு தாக்கியபோது எழுகின்ற காட்சிப்புலன் மற்றொன்று. ஈதே வெளிறு (Gray). இந்நிறத்தில் பலவகை நிறங்களும் அடங்குகின்றன. வெளிறு நிறத்தில், வெண்மையிலிருந்து கறுப்புவரை யுள்ள பலவகையான விளக்கநிலைகளும் அடங்குகின்றன. இவ்வெளிறுநிரலில் நிறம் காணப்படுவதில்லை. இவ்வாறு வேறுவேறாக விளங்கும் இரண்டு தன்மைகள் ஒன்றுகூடுவதையும் காண்கிறோம். குறித்த அளவுள்ள அலைகளாக எழும் காட்சித் தூண்டல், பல அளவுள்ள அலைகளோடு ஒன்று சேர்ந்து தாக்குமானால் நிறமும் வெளிறும் இயையக் காண்கிறோம். அப்போது எழுகின்ற காட்சிப்புலனை ஒளிறு (Tint ரங்கு) என்போம். ஒருநிறமாக உள்ள பொருள்களிலேயே, ஒன்று பளபளப்பாகவும் ஒன்று வெளிறாகவும் தோன்றுவது இதனாலேயேயாம். ஒவ்வொரு நிறத்திற்கும் அதனோடு இயையும் வெளிறுநிரல் வழியே ஒளிறுநிரல் வகுக்கலாம். மிகவும் பளபளப்பானது சிறிது பளபளப்பானது பளபளப்புக் குறைந்தது என்று தொடர்புபடுத்தலாம்.

மிளிர்புலன் - நிறம்:—ஒரேயளவான ஒளியலைகள் நம்கண்ணைத் தாக்குவதால் வேறு பிரித்தறியக்கூடிய ஒவ்வொரு நிறமும் எழுகின்றன. ஒளியலைகள் சிறுகச் சிறுக அளவில் உயர்ந்து தொடர்ச்சியாய் நிற்பதைக் கண்டோம். ஆகவே அலை அளவைக் கொண்டு வேறுபிரித்தால் எண்ணிலாத அலைகளாகப் பிரிக்கலாம். ஆனால், அத்துணைநிறங்களை நாம் அறிவதில்லை. 400 ஒளியலைத்தனியன் அளவுள்ள அலையின் தாக்கலால் நமக்கெழும் புலனும், 410 ஒளியலைத் தனியன் அளவுள்ள அலையின்தாக்கலால் நமக்கெழும் புலனும் வேறுபட்டுத்தோன்றுவதில்லை. நமது கட்புலன் அவ்வளவு நுட்பமாக வேறுபடுவதில்லை. வெவ்வேறெனை நாம் பிரித்தறியும் மிளிர்புலனை நிறம் என வழங்குகிறோம். நிறக்கலவைப் பொறிகள் (Colour Mixdrus) என்ற கருவிகள் உள்ளன. அவற்றில் இனமான இரண்டு நிறங்களை வைத்து எப்போது வேற்றுமை தோன்றுகின்றது என்று காண்பர். இவ்வாறு வெவ்வேறு தோன்றும் நிறங்களின் எண்ணிக்கையைக் கண்டறிகின்றனர். காயா, அவிரி, கருமை, (நீலம்) பச்சை, மஞ்சள், கிச்சிலி (Orange) செம்மை என்ற நிறங்கள் எழுகின்றன. இனிச் செம்மையும் காயாநிறமும் கலந்தால் பலவகையான செம்மை நிறங்கள் (Purples) எழுகின்றன.

இவற்றை எல்லாம் கூட்டிப் பார்த்து வேறு வேறாகப் பிரித்தறியப்படும் நிறங்கள் 150-ல் இருந்து 160வரை உள்ளன என்று ஆராய்ச்சிவாணர் கூறுகின்றனர். ஒருவருக்குத் தோன்றும் வேறுபாடு மற்றொருவருக்குத் தோன்றுவதில்லை. ஆகவே ஆளுக்கு ஆள் இவ்வெண்ணிக்கை சிறிது மாறுபடும். அளவை இல்லாத நிறங்களைத் தூநிறம் என்றழைப்போமாக. தூநிறங்களில் சில மற்றவற்றைவிட இன்றியமையாச் சிறப்பினவாக இருக்கின்றன. கிச்சிலி நிறம் செம்மை நிறத்தோடு இயைந்து விளங்குகிறது. ஆனால் பசுமையும் செம்மையும் இவ்வாறு இயைபு பெறாது மாறுபட்டு விளங்குகின்றன. ந்யூடன் என்பார் இசைநாலோர் ஏழிசை கூறுவதுபோல் காயா, அவிரி, கருமை, பச்சை, மஞ்சள், கிச்சிலி, செம்மை என ஏழு நிறம் கூறினர். ஹெறிங் என்பவர் கருமை, பச்சை, மஞ்சள், செம்மை என்ற நான்கே மற்றெவற்றிற்கும் முதலாகி நிற்கும் முதனிறங்கள் (Primal Colors) என்று கூறுகின்றனர். கருமை, பசுமை, பொன்மை, செம்மை என்ற சொற்கள் எல்லா மொழிகளிலும் பயின்று வருதலும் காண்க. கீழ்வரும் செய்க்காட்சி அதனை வற்புறுத்தல் காண்க.

கண்ணை நேரேயுள்ள ஒரு புள்ளியிலே நாடி நடுநிறுத்தி வைக்கின்றோம். நடுநிலையிலிருந்து கண்ணில் விளிம்பு நிலையில் வருமாறு ஏதேனும் ஒரு நிறத்தைச் சிறுகச்சிறுகத் தள்ளிக்கொண்டு போவோமானால், சிறிது தொலைவு சென்றதும் நிறமானது வெளிறாக மாறிவிடுகின்றது. பலநிறங்களும் இவ்வாறு நடுநிலையிலிருந்து விளிம்புநிலைக்குக் கொண்டுவரப்பட்டபோது வெளிறுவதற்குமுன் நிறம் மாறுகின்றன. ஒருவகையான பச்சை நிறமானது இவ்வாறு தள்ளப்படும்போது மஞ்சளாய்க் கருமையாய்ப் பின் வெளிறுகும். ஆனால் நான்கு நிறங்கள் மட்டும் அவ்வாறு மாறுவதில்லை. 477 ஒளியலைத்தனியன்கள் அளவுள்ள அலைகளால் எழும் கருமைநிறமும், 377 தனியன்கள் அளவுள்ள அலைகளால் எழும் பசுமைநிறமும், 577 தனியன்கள் அளவுள்ள அலைகளால் எழும் மஞ்சள்நிறமும் சிறிது செச்சையாய்த் தோன்றும் செம்மைநிறமுமே முதனிறங்களாகும். இவையே மாறா நிறங்களாம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[54-வது பக்கத் தொடர்ச்சி]

மன்னவன் மாண்ட தெல்லாம்
மீண்டிடான் மைந்த னென்றே!

"நம்மிரு கண்ணுமொக்கின் யானின்று வேண்டுவதைத் தாழாது தந்திடுதி" என்று கைகேசி கூறுதலும்,

கள்ளவிழ் கோதை கருத்துண ராத மன்னன்
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கா
னுள்ள முவந்தது செய்வ னென்று லோபேன்
வள்ள லிராம னுன்மைந்த னாணை யென்றான்.

[தேன்வழிகின்ற கூந்தலையுடைய கைகேசியின் கருத்தை உணராத தயரதன், மிகுந்த பெரிய ஒளியை வீசும் மின்னலைப்போல் பிரகாசிக்கும்படி சிரித்து, "மனம் உவந்து அவ்வாறே செய்வேன். சிறிதும் உலோபம் செய்யேன்—வள்ளலாகிய உன்மைந்தன் இராமன்மேல் சத்தியம் என்றான்.]

புண்ணியத்தின்மீது வைத்த சத்தியத்தைக் கம்பர் கொள்ளவில்லையாயினும் மைந்தன் இராமன்மேல் வைத்த ஆணை வான்மீகத்திலும் இருக்கின்றது. எனினும், தன் உயிரிற்கு உயிராய இராமன்மேல் ஆணை என்று அங்கு இயம்பிய தயரதன், பின் வரநிற்கும் நிகழ்ச்சிகளை நினைப்பவர்க்கு நாடகச்சுவை சிறக்குமாற "உன் [illegible] என்று இங்கு மாற்றிக்கொண்

188902

டனன்." "இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ" என்றாள் முன்னர்க் கைகேயி. "வள்ளல் இராமன் உன் மைந்தன்" என்றான் இன்று தயரதன். இவ்வகையில், அவள் கண்ணும் இவன் கண்ணும் இதுகாறும் ஒக்கின்றன. உள்ளதோர் தன்மையை ஒன்றாகக் காண்பதனினும் இல்லாததை அமையநோக்குவதில் ஒற்றுமை பின்னுமோர்மடங்கு அதிகமாகும். ஆயினும் மனம் மாறுபடத் தலைப்பட்டதும் காட்சியும் வேறுவேறாகி அகலுமாதலால்

ஏய வரங்க ளிரண்டி னொன்றி னாலென்
சேயுல காள்வது சீதை கேள்வ னொன்றாற்
போய்வன மாள்வ தெனப்பு கன்று நின்றாள்
தீயவை யாவையி னுஞ்சி றந்த தீயாள்

[கொடியவை எல்லா வற்றிலுங் கொடியவளாகிய கைகேசி, "நீ கொடுத்த இரண்டுவரங்களில் ஒன்றினால், என்மகன் உலகத்தை ஆள்வது; மற்றொன்றால் சீதையின் கணவன் போய்வனத்தை ஆள்வது" என்று சொல்லி நின்றாள்]

பரதனைக் கைகேசி தன் மகன் என்று பிரித்துக் கொண்டது போன்றே தயரதனும் சிறிதுபின்னர், "என்மகன் என் கண்......நாடிறவாமை நய" என்று கைகேசியை வேண்டும்போது இராமனைப் பிரித்துக் கொள்கின்றான். "உன்கண் என் கண்ணை ஒத்திலது" என்று கைகேசியை மறுப்பதற்கே, "என் மகன் என் கண்" என வகுத்தனன் போலும்.

பரதனைத் தன்மகன் என்று பகிர்ந்து கொண்ட கைகேயி இராமனை யார்மகனும் என்னாது "சீதை கேள்வன்" என்னும் உறவினால் குறிக்கவைத்த கம்பர் திறம் சாலப்பெரிது. மன்னவன் வாய்மையைக் காக்குமோர் நோக்கமேகொண்டு பண்டைய வரங்களை அவள் வேண்டினாளல்லள் என்பதற்குச் சான்று இதுவொன்றே போதும். சற்றுமுன்,

காத லுன்பெருங் கணவனை யஞ்சியக் கனிவாய்ச்
சீதை தந்தையுன் தாதையைத் தெறுகில னிராமன்
மாது லன்னவன் உந்தைக்கு வாழ்வினி யுண்டோ
பேதை உன்துணை யாருளர் பழிபடப் பிறந்தார்

என்று மந்தரை தெருட்டுவாள்போல் வஞ்சித்த சொற்களே கைகேசியின் மனதில் ஊன்றியிருந்ததாற்றான் "சீதைகேள்வன்" என்னும்மொழிகளை அவளது வாய் இப்பொழுது உமிழ்ந்தது. "சீதை கேள்வன்" எனக் கைகேசி உரைத்ததால் உணரநிற்கின்ற இவ்வுண்மை யன்றியும், அவள் நுவலாது விட்டதனின்றும் நுவன்றமுறைகொண்டும் பெறற்குரிய உறுதிகள் வேறு சில உள. கைகேசியின் மனக்கோள் அமைந்த பரிசு இதுவெனக் காட்டும் அந்நுண்மையைக் காணற்கு,

இருவ ரத்தினு மொன்றினால் அரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை யேழிரு பருவங்கள் பெயர்ந்து
திரித ரச்செய்வ தொன்றினாற் செழுநில மெல்லாம்
ஒருவ ழிப்படு முன்மகற் குபாயமீது

என்று கூனி கற்பித்ததையும், அப்பாடத்தைச் சொல்லிப் பயில்பவளாய கைகேசி

நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டல்
துன்று கானத்தி லிராமனைத் துரத்தலிவ் விரண்டும்
அன்ற தாமெனி லரசன்மு னென்னுயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவன்யான் போதிநீ

என்று உருச்செய்துகொண்டதையும், பின் இப்பொழுது,

ஏய வரங்க ளிரண்டி னொன்றி னாலென்
சேயுல காள்வது சீதை கேள்வ னொன்றாற்
போய் வன மாள்வ தெனப்

புகன்று நின்றதையும், பிறகு தன்முன் வந்து வணங்கித்தொழுது பணிகேட்ட இராமனை நோக்கி,

ஆழிசூ ழுலக மெல்லாம்
பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப்
புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வா

என்று விதித்ததையும் ஒருங்குசேர்த்து நம் மனமெனும் படாத்தினிற் சித்தரித்துக் கொள்ளல்வேண்டும். பண்டைநாள் இராகவன் பாணியில் உமிழ் உண்டை உண்டதனை நிபமாய்வைத்துத் தன் சினத்தினை மூளமூளக் கனற்றிய கூனி அவனுக்குக் கேடுசூழுங்கருத்தினையே முதலாக உடையளாதலால் நன்று தோற்பித்து அவ்விராமனை அடவிக்ககற்றிவிடும் வன்மையே முன்னுந்த, "அரசுகொண்டு பெருவனத்திடை ஏழிருபருவங்கள் பெயர்ந்து திரிதர" முதலில் செய்வித்தபின்னரே பரதனுக் கரசு நிலைக்குமென்பதை நிறுவலாயினாள். செற்றம் பெரிதுடையாளாயினும் அது போமளவு தன் நாவைச்செலுத்தி, மீளும் எல்லை வரையாது இராமனைப் பெருவனத்திடைப் புகுத்துமாறு கற்பித்தால், இக்கொடுமையால் ஒருகால் கைகேசியின் மனம் கைப்புண்டு தன் வஞ்சனையெலாம் வழிந்தோடிவிடுமோ என அஞ்சிய மந்தரை பேரவாவினால் அனைத்தும் வீண்போகா வண்ணம் ஏழிருபருவங்கள் எல்லையிட்டனள். கைகேசிக்கோ இராமன்பால் யாதும் வன்மமில்லை. ஆயினும் தன் பிறந்தகத்து நன்மையை நோக்கின் ஜனகன்றன் கோமருகனைக் கோசலத் தரசுகொள்ளாது நீக்க வேண்டியது அவள் கடனாகின்றது. ஆதலின் பரதன் அரசன் ஆவதே அவள் நோக்கத்திற்கு முக்கியமான காரியமாய்த் தென்படும். எனின், கூனிகற்பித்தபாடத்தை ஓதிக்கொள்ளத் தலைப்பட்ட கைகேசி நம்பியை நளிர்முடி சூட்டுதலை முதலாக மாற்றிவைத்துரைத்ததில் யாதும் வியப்பில்லை. ஆயினும் நம்பியின் தலையில் சூட்டிய முடி சோராதிருத்தற்கு இராமனை நீக்கிவிடல் அவளுக்கு இன்றியமையாததாய்த் தோன்றியதால் அதனைப் பின்னர் வைத்தாள். தன் தந்தை கேகய வேந்தனுக்கு ஜனகனாலும் வேறுள வான் பகைவர்களாலும் விளைதற்குரிய இடர்களுக்குப் பதினான்கு ஆண்டு என்னும் எல்லையில்லை. ஆதலின் பரதன் எந்நாளும் அயோத்தியின் அரசனாயிருத்தலே அவள் கருத்திற் கேற்றதாகும். இதனால் வனத்திற்கு இராமன் செல்வதே கருமமெனக்கண்டதன்றி அவன் மீளும் நாளைக் குறிகொள்ள நினைத்ததில்லை கேகயன் தனயை மனம். கூனியின் பாடத்தைப் படித்தபோதும் "துன்றுகானத்திடை இராமனைத் துரத்தல்" என்ற அளவு நிறுத்திக்கொண்டனள்; தயரதன்முன் கழறியபோதும், "சீதைகேள்வன் போய் வனமாள்வது" என்னலாயினாள். இனி, இராமனுக்கு வனம்விதித்து வழங்குகின்ற வேளையில், "ஆழிசூழுலகமெல்லாம்

பரதனே யாள" என்று தன் னோக்கத்திற்கடுத்ததை முதலிற்சொல்லி மற்றையதை "நீ போய்" என்று போக்குகின்ற வாசகத்தால் துவக்கினாளாயினும், சென்னி மண்ணுறவணங்கிச் சுந்தரப் பவளச்செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைச் சுந்தரத் தடக்கை தானை மடக்குறத்துவண்டு "தந்தையுந் தாயும் நீரே பணிமின்" என்ன நின்ற அண்ணலின் நிலையினாலே உருகிய உளத்தளாய் அச்சிற்றவையும், "ஏழிரண்டாண்டில் வா" என்றவோர் அழைக்கின்ற வாசகத்தினாலேயே அரிதின் முடித்துவிட்டாள். இராமனிடத்தில் அவளுக்கு யாதும் பகையில்லை. அரசியல் அவசியத்தினாலேயே அவனை அகற்றவேண்டி யிருக்கின்றது. அவ்வவசியம்ஒருபங்கெனின் அவன்பால்பரிவும் மறுபங்கா யமைந்ததால் ஆண்டு பதினான்கில் அடவிநீங்கி அவன் மீளுமாறு கைகேசியின் நன்னாப் பகர்ந்துவிட்டது. நிலையொன்று நிற்க மனமொன்று எண்ண வாயொன்று வழங்கிவிடல் என்றும் புதுமையன்று.

தயரதனிடத்தில் பண்டைய வரப்பயன் இரண்டையும் கைகேசி இறக்குங்காலையில் யாரையும் இரமிக்கச் செய்யும் இளவல் அவளெதிரில் இல்லையாகையால் அவன் "போய் வனமாள்வது" எனச் சாற்றினாள். மீண்டுவரும் எல்லை வகுத்தாளல்லள்; இவ்வாசகம் 'வனம் மாள்வது' என்றும் பிரிதற்கியன்றதாதலின், தயரதன் நெஞ்சத்தை அது எத்துணைத் துண்ணெனத் தாக்கியிருக்கும் என்பதை நாம் எண்ணிக்கொள்ளல் அருமையன்று. பரதன் ஆள்வதோடு இராமன் மாள்வதை மனதால்நினைத்தே முறண்பட வற்புறுத்திய மாகயத்தி என்னல் ஏற்காதெனினும் இருங்கானஞ் சென்றார் உயிரோடு வருதல் பெரும்பான்மை இல்லையெனும் எண்ணம் அவள் சிந்தனையிற் கலந்திருக்க வாக்குத்தான் இவ்வாறு இருபொருள்பட அமைந்ததென் றுன்னவுங்கூடும். மாள்வதோ மைந்தனெனத் தயரதன் முதலிற் றுணுக்கமெய்தியிருக்கலாமாயினும், 'நாடிறவாமை நய' என்றும், "வெம்பால் மொய்கான்இடை மெய்யே நெடியான் நீங்க நீங்குமென் னாருயிர்'" என்றும் பின்னர் புகல்கின்ற அவன் மொழிகளால் அடவிக்கேயன்றி இராமனை ஆருயிர் நீக்குதலில்லை எனச் சிறிது போழ்தினுள் உணர்ந்து கொண்டனன் என்பது திண்ணம். ஆயினும் என்! மாள்வ தென்பதற் கிணையாய கொடுமையே 'வனம் ஆள்வது' என்ற மொழிகளில் அடங்கிய குரூரப் பரிகசமும் உடைத்து. "கானகத்திற்சென் றாளட்டு முன் காதன்மைந்தன்" என்ற உரை, "கானகத்துக் கடுந் துயர்க்கெல்லாம் ஆளாகி அழியட்டும்" என்பதைக் காட்டிலும் கொடியதென் றுணர்த லருமையன்று. பின்னது வன்னெஞ்சை மாத்திரமே காட்டும்; முன்னது, வன்னெஞ்சால் தான் வேண்டுவதைப் பெறுவது மாத்திரமன்றி வாயால் பிறர்மன முளைய வருத்துகின்ற கயமையையும் காட்டுவதாகும். பொய்ச்சூதிலும் தன் மெய்காத்த மூத்தோன் கடவநாளெல்லாம் அடவியிற் கழித்தபின்னும் தாயமும் தரணியும் வழங்கமறுத்த துரியோதனன்பால் தணிந்தறமுங் கிளையுறவுங்கொண்டாடக் கண்டாற்றாச் சீற்றத்தனாய வீமசேனன்,

கானுள வுனைவிடுத்த கண்ணிலா வருளிலிதன்
காதன் மைந்தன்

தானுமுந் தரணியெல்லா மொருகுடைக்கீழ் நீயாளத்
தருவன் இன்றே

என்ற விடத்திலும், தம்மைக் காட்டிற்கு அனுப்புதலைக் "கான் ஆள விடுத்தல்" என்ற சொற்களால்இளிவர நகுகின்ற செய்தியைக் காணலாம்.

தொலையாத கானகத்து எல்லையில்லாக் காலமெலாம் இராமன் இருந்து தீரவேண்டுமெனும் பொருள்படக் கைகேசி தயரதனிடத்தில் கூற நேர்ந்ததன் காரணம் யாவதாயினும், நாடகநிகழ்ச்சியை இயற்கைபட நடத்துதற்கு அது மிக்க உதவியாய் நின்றது. "இராமன் பதினான்கு வருஷம் தண்டகாரணியத்தில் மரவுரி மான்றோல் உடுத்துச்சடையணிந்து முனிவன்போல் வாழவேண்டும்" என்று வான்மீகத்தில் தயரதனை அவள் வெளிப்படையாய்க் கேட்டுவிடுகின்றாள். முனிவனாய் இராமன் கானகத்தில் வைகுதல் வேண்டும் எனுந் தன்மையைக் கம்பராமாயணத்தில் அவள் தயரதன்பால் உரைத்தபோது விளம்பியிலளேனும், இராமனிடத்து இயம்புஞ் செவ்வியில், "தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு புண்ணியத் துறைகளாடி" வரும்படி விதிக்கின்றாளாதலின் இதனை இங்கும் மறந்திலள் என்பது தெரிகின்றது. ஆயினும், பதினான்கு ஆண்டுகளில் இராமன் வனத்தினின்று மீளலாம் என்பதைத் தயரதனுக்கு அவள் கம்பராமாயணத்தில் எங்கும் இசைத்ததில்லை. இவ்வாறு விடுத்ததன் நாடகப் பயனையுணர்தல் யாவர்க்கும் எளியதே. ஆயினும் அதனை முன்னுணர்ந்தமைக்க வல்லார் கம்பரேயாவார். அறுபதினாயிரமாண்டு மகவின்றி வருந்திய வேந்தன் அம்மகனைப் பிரிந்திருக்கவேண்டிய சின்னாள் ஈரெழு பருவங்களே எனத் தேறித் தான் கூர்ந்த துயரை உயிரோடு கொண்டு முடிக்காமலிருப்பதுங் கூடும். மீள்வான்இராமனெனின் அதன்பின், பரதன்சுமந்திருந்த அரசு என்னுவது என்பதும் ஐயத்திற் கிடமானதே. மீண்டுமிராம னவ் வரசினை எய்தினும் எய்தலாம். மற்று அன்றெனினும், "பெறுவாயேல் மண்ணே கொள் மற்றைய தொன்றை மற' வென்ற நிலைநின்ற தயரதனுக்கு அதுவொரு பொருளுமன்று.

ஆண்டுகள் பலப்பல ஆயிரம் புதல்வனின்றிவைகிய மன்னவன், பெற்றபின் உணர்ந்த அருமையால் ஏழிரண்டாண்டளவும் அவனைப் பிரிதலாற்றாது இன்னுயிர் துறந்தனன் என்னும் வான்மீகிமுனிவரது கொள்கையிலும் நயமிருக்கின்றதென்பதற்கு ஐயமில்லையேனும், இராமன் வருவது தெரிந்தால் ஒருகால் அப் பேதை மன்னன் ஆற்றியிருந்து மீண்டும் அப் புதல்வனுடன் பயில்கின்ற பேற்றினை அடைந்து மகிழ்வானன்றோ என்றெண்ணி நைகின்ற நம்மனோர் உள்ளத்தின் இரக்கத்தால் இந்நிலையின் அவலச்சுவை கம்பராமாயணத்தில் அதிகமாகாது தீராது.

அரசராவோர் வையத்தைக் காப்பதேயன்றி ஆள்வதெனும் நினைவினின்று அறவே அகற்றிவைக்கின்ற கம்பர், 'என்சேய் உலகாள்வது' என்றும், "ஆழிசூழுலகமெல்லாம் பரதனே ஆள" என்றும் வகுக்கின்ற கைகேசியின் வாய்மையைக் கொண்டு ஆட்சியின் நலத்தை விழைந்து அரசுவேண்டுவார் நோக்கத்தின் நுண்மையை நன்கு விளக்குகின்றார்.

என். ஜே. தேசாய்ஸ்

உயரிய உத்திரவாதமுள்ள
கஸ்தூரி
மாத்திரையையே
எப்பொழுதும் உபயோகியுங்கள்.
ஆண், பெண், குழந்தைகளுக்கு
இன்றியமையாத
ஓர் சிறந்த டானிக்.
250 மாத்திரை கொண்ட
புட்டி அணு 6. டஜன் ரூபா 3.
தபாற் கூலி இனும்.

24-மணி நேரத்தில் ஆச்சரிய குணம்!!!
உயரிய உத்திரவாதமுள்ள
சர்வ படை மருந்து

டப்பி 1-க்கு விலை அணு 6. டஜன் ரூபா 3.
தபாற் கூலி இனும்.

மிகுந்த மணம்! சிறந்த குணம்!!
- பால் பெருங்காயத்தை -
உபயோகியுங்கள்.

கருப்புப் பெருங்காயம் ஒருவிசை உபயோகிப்பதற்கு இது ஒரு தோலா உபயோகித்தால் போதுமானது. டப்பி 1-க்கு விலை அணு 4. டஜன் ரூபா 3. தபாற் கூலி இனும்.



சிறந்த நோய் நிவாரணி
ஆர்யாஞ்ஜன்
எல்லா வலிகளையும், வீக்கங்களையும், நோய்களையும் நீக்குவதில் ஒப்புயர்வற்றது.
புட்டி 1-க்கு விலை அணு 8.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். 88, தங்கசாலை வீதி, சென்னை.

N. B. விபர கேட்லாக்கிற்கு எழுதவும். சென்னைக்கும் வெளியூருக்கும் விற்பனை வியாபாரிகளும், கான்வாஸர்களும் தேவை. கடிதங்கள் இங்கிலீஷில் எழுதுக.

நோயற்ற : : : : வாழ்வே | ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள் | குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"
(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி,கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்
இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதும் தயங்காதீர்கள்.

ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்

தபால் பெட்டி 151, சென்னை | மதராஸ் : : : : சென்னை. மானேஜர்.—வி. ரகுபதி, B.A., B.L. கேட்லாக் இனும். ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும். | தந்தி விலாசம் 'கல்பம்', சென்னை.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire,' Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanagaramet its end on the field of Talikota,in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF, BENOY KUMAR SARKAR, M.A., **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT:

Snap-shots of World movements in Commerce Economic Legislation Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA, The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England,how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

HINDU-PAD-PADASHAHI.

or a Critical Review of the Hindu Empire of Maharashtra by VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR, M.A., Ph. D., Dacca.

by V. V. OAK B. A., S. T. C. Pp. 1 to 24X168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் ஆ. மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு- ஆ. நா. கன்னையா 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை கா. ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி. ஜயராம ஐயர் ... 0 5 0
11. வெவிக்ஸ் துரைத்தன விளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S. சுப்பிரமணிய ஐயர் 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13 கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் வ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே. பி. சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால் பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன் - S. சீனிவாசையர்.... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **The New Era Story Books Series,**
    Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II " **As. 4.**
23. Book III " **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B.A., L.T., **As. 3**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A. L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo, M. A. **As. 6.**
27. **The Clay Cart** **As. 6**

V. P. Charges, Extra of the Prices.

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்
எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்றாகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

நம்பிக்கையுள்ள — — ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனாம்!

**ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,**
26, பிராட்வே,
சென்னை.

வைத்திய ரத்ன பண்டிட்
டி. கோபாலா சார்லு அவர்களின்

ஒப்புயர்வற்ற மருந்துகள்.

பிளேக்	காலரா
ஹைமதி பானகம் = = சததௌத கிருதம். 1 செட் மருந்துகளின் விலை ரூ. **2-2**	கற்பூராதி யரிஷ்டம் = = விஷூசிசஞ்சீவினி வடி. 1 செட் மருந்துகளின் விலை ரூ. **1-2**
பிருகுவடி	**விருஷ்ய யோகா**
வெள்ளை, வெட்டை நோய்களை போக்கச் சிறந்த மருந்து. பூரண குணத்திற்கு மருந்து. விலை ரூ. **6-12**	நரம்புத்தளர்ச்சி, பேடித்தனம், பலஹீனம் இவைகளைப் போக்குவதில் பெயர்பெற்ற மருந்து. பூரணகுணத்திற்குமருந்து விலை ரூ. **5-0**

எல்லா விடங்களிலும் கிடைக்கும். விபர காட்லாக் இனாம்.

தந்தி விலாசம்:— "பண்டிட்" டெலிபோன் நெ:- 2191

தபாற் பெட்டி நெ:— 287.

ஆயுர்வேத ஆஸ்ரமம்,
151, கோவிந்தப்ப நாயகன் தெரு,
ஜி. டி. சென்னை.

அருமையான பொடி! **32** தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.

தபால் பெட்டி, நெ:—**156**

புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.

சமையல் — —
சுகம் — —
வேண்டுமானால்

ருக்மணி குக்கர்

வேண்டும்

இது நாடறிந்த விஷயம். அனுபவசாலிகள் தம் செயலைப் பின்பற்றி நீங்களும் ஒரு அடுக்கு வாங்குங்கள்.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய ஏழு அடுக்குகள் ரூ.12, 16, 20, 25, 31, 37, 44.
விபர புத்தகம் இனாம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (12) சென்னை.

ராமுலு—13

		Rs.	As.
1.	ஸங்கீத சிந்தாமணி	3	0
2.	திராவிட கானம்	3	0
3.	ஸங்கீத சில்லரைக்கோர்வை	3	0
4.	கீர்த்தன ரத்னங்கள்	1	4
5.	சங்கீதத் திருப்புகழ்	0	8
6.	ராஜேந்திர மோஹனு	1	0
7.	திகம்பர சாமியார் பால்ய லீலைகள்	5	0
8.	ரமாமணி	2	0
9.	சரோஜனி	2	0
10.	வசீகரண தந்த்ரம்	2	0
11.	அநுபவ சிந்தாமணி	1	0
12.	Kissing in Practice	2	0
13.	Fruits of Married Love	0	12

காலண்டர், கேட்லாக் இனாம்!

M.S. ராமுலு & கம்பெனி, ராயபுரம், மதராஸ்.

ஒட்டக்கூத்தர் பாடிய { **தக்கயாகப்பரணி** ::

மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயர் பதிப்பு.

விலை ரூ. **4.** கலாநிலயம், புரசைவாக்கம் சென்னை.

வித்வான் த. சண்முக கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0)

டிப்போ, பம்பாய் கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA NANJANGUD

பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
3. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய வற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஓயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9 நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பைபிண்டு செய்யாதது	8	0	0	பைபிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

ஜியார்ஜ் சக்கரவர்த்தி லண்டனிலுள்ள ஒரு கோயிலுக்கு வருடத்திற்கொருமுறை சென்று மதப்பிரசங்கம் செய்து வருகின்றாரென்றும் அதற்கென ஆண்டு தோறும் அரசருக்கு ஒரு கினி அதாவது சுமார் 15 ரூபாய் கொடுக்கப்படுகின்றதென்றும் லண்டன் செய்தி யொன்று கூறுகின்றது.

***

இந்தியாவின் விடுதலையின்பொருட்டுக் காந்தி யடிகளால் துவக்கப்பெற்ற சட்டமறுப்பு இயக்கத்தை யொட்டி 1930 வருஷம் டிசம்பர் மாதம் இறுதிவரை சிறைசென்றவர்களின் தொகை 54000என்றும், டிசம்பர் இறுதிவரையில் விடுதலையடையாது சிறையிலிருந்தவர்களின் தொகை 23500 என்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அறிக்கையொன்று கூறுகின்றது.

***

ஐரோப்பிய மாது ஒருத்தி தமது மரண சாஸனத்தில் தாம் வளர்த்த கிரிப்பிள்ளைக்கென்று 200பவுன் எழுதிவைத்திருக்கின்றார் என்றும், இவர் 15 வருடங்களுக்குமுன் தாம் வசித்தவீட்டில் தீப்பற்றிக்கொண்டதென்றும், அச்சமயம் இக் கிரிப்பிள்ளை சத்தமிட்டு இவரை விழிக்கச்செய்ததென்றும், இல்லையேல் அவர் தீக்கிரையாயிருக்கவேண்டும் என்றும் அவர் அச்சாஸனத்தில் கூறியிருப்பதாயும் லண்டன் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

பின்வரும் காங்கிரஸ் தலைவர்கள் இராஜப் பிரதிநிதியின் அனுமதிப்படி விடுதலை செய்யப் பெற்றுள்ளனர்:—

1. மகாத்மா காந்தி, 2. பண்டிதர் ஜவாஹரிலால் நேரு, 3. சேட் ஜம்னுலால் பஜாஜ், 4. சிவப்ரசாத் குப்தா, 5. மௌலானா அப்துல் கலாம் அசாத், 6. ஜயராம் தாஸ் தௌலத் ராம், 7, சர்துல் சிங் கவீஸ்வர், 8. சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், 9. வல்லபாய் பட்டேல், 10. சென் குப்தா, 11. பட்டாபி சீதாராமய்யர், 12. டாக்டர் சத்யபால், 13. ஹநுமந்த ராவ் கௌவாஜி, 14. சர்தார் மங்கள சிங், 15. லாலா துனி சந்த், 16. டாக்டர் அன்சாரி, 17. மதுரதாஸ் திரிகம்ஜி, 18. மௌலானா முப்டி கிபயத்துல்லா, 19. சையத் அப்துல்லா ப்ரெல்வி, 20. ஜம்னு தாஸ் மேட்டா, 21. கோவிந்த காந்த மாளவியா, 22. சரோஜினி தேவி, 23. ஸ்ரீமதி சென்குப்தா, 24. ஸ்ரீமதி கமலா நேரு.

***

சோலியா ஓல்டு பீல்டு என்னும் உலகக் கியாதி பெற்ற வைத்திய நிபுணர் லண்டனில் செய்த பிரசங்கத்தில் கூறியதாவது:—

உலகம் சிறந்துயர வேண்டுமெனின் மனத்தினிடம் மாறுதல் ஏற்படவேண்டும். சாத்வீகமான உணவுதான் மனத்தைத் தூய்மையுடையதாகச் செய்யும். எனவே இனி வருங்காலம் சமையற்காரர்கள் கையிற்றான் இருக்கின்றது. அரசியல் வாதிகள் பேசலாமே ஒழிய வேறு ஒன்றும் அவர்களாற் செய்ய இயலாது. தேவையான மாறுதல் உலகத்தில் ஏற்படுவதற்கு நாம் உப்பை அகற்றி விடவேண்டும். இதற்கென நாம் உப்பைக் குறைத்துக்கொண்டு வந்து உப்பு இல்லா உணவு அருந்தப் பயிலவேண்டும். அதிக உப்பை நாம் உபயோகிப்பதால் நாம் சீக்கிரத்தில் கிழத்தனத்தையும் அடைகின்றோம். உப்பை நீக்கி விட்டு, திராட்சைப்பழம், பால், பழம் முதலியவற்றைப் பரிக்ஷார்த்தமாக மூன்று மாதம் ஒருவர் உண்டால் போதும். அவர்களிடமிருந்து கோபம் அகன்று விடும். கோபம் அகலுமேல் பின் படிப்படியாக மனிதன் அடங்கி உயர்வானல்லவா?

***

புதுச்சேரி ஸ்ரீ சமரசஞான சங்கீதசபையின் 4-வது வருடக்கொண்டாட்டத்தில் சுமார் 250 ஏழை மக்களுக்கு வஸ்திர தானம் செய்யப்பட்டது. வைரவன்குளம் ஜமீன் மிட்டா ஸ்ரீமான் அண்ணு மரியதாஸ் முதலியார் அவர்கள் குமாரர் ஸ்ரீமான் தம்புசாமி முதலியார் இச் சபையை ஸ்தாபித்து, இதன் மூலம் சங்கீத ஞானத்தையும் நல்லொழுக்கத்தையும் அறிவையும் விசாலப் படுத்துவதற்கென முயன்று பஜனை முதலிய சத் காலட்சேபங்களால் அநேக இளைஞர்களைத் தேர்ச்சி அடையச்செய்து வருகிறார்கள். ஏழைகளுக்கு அவ்வப்போது அன்னதானமும் வஸ்திரதானமும் செய்யப்படுகிறது. 18-1-31 அமாவாசை ஆகிய ஞாயிறன்று மாலை இதன்நாலாம் ஆண்டுநிறைவு நிகழ்ந்தது. அவ்வமயம் பிரஞ்சு கவர்னரும் மேற்படியார் சீமாட்டியும் தலைமை வகித்துப் புருஷர்களுக்கு இடுப்புக்கு வேஷ்டியும், மேலுக்கு அங்க வஸ்திரமும், பெண்டிர்களுக்குப் புடவைகளும் இனமாக வழங்கினர். ஐரோப்பியர்களும், இந்தியப் பிரமுகர்களும் ஏராளமாய் வந்திருந்தனர். ஸ்ரீமான் கலவை சுப்பராய செட்டியாரின் மாளிகை காந்தவிளக்குகளாலும் பலவித வர்ணமுள்ள மின்சார விளக்குகளாலும் அலங்கரிக்கப்பெற்று ஜோதிமயமாய் விளங்கிற்று. கவர்னர் தம்பதிகள் ஸ்ரீமான் தம்புசாமி முதலியாரவர்களின் தர்ம கைங்கரியத்தை மிகவும் பாராட்டிப் புகழ்ந்தார்கள். புல்லாங்குழல், பிடில், கோட், கஞ்சிரா, ஆர்மோனியம், தபேலா, நாகசுரம், வாய்ப்பாட்டு முதலிய சங்கீதங்களில் தேர்ந்த நிபுணர்களும் மிருகம் பட்சிகளைப்போல் கத்தும் விகடகவியும் சபையோர்களனைவரையும் ஆனந்திக்கச் செய்தனர் என்று புதுச்சேரிச் செய்தி கூறுகிறது.

அரசாங்க இஞ்சினியர்களால் மதிக்கப்பெற்ற
மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் ::
:: அதன் அநுபவப் பயிற்சி முறையும்

முதல் பதிப்பு விலை ரூபா 1. இரண்டாம் பதிப்பு 50 படங்களுடன் 200 பக்கங்கள் விலை ரூபா 2. தபால் சார்ஜு வேறு. வெளிநாடு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் தேவை.

எங்கள் மோட்டார் ஸ்கூல் 1916ஞ ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெகானிஸம் கற்றுக்கொடுத்துக் கவர்ன்மெண்டிலைசென்ஸும் பாடசாலைச் சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென்னிந்தியா
மோட்டார் இஞ்சினீரிங் ஒர்க்ஸ் & பாடசாலை,
மைலாப்பூர் :: சென்னை.

தமிழ்நாடு ... நிலையம்
188902

KALANILAYAM.
REG. NO. M, 2324.

புதிய பதிப்பு! வெளிவந்து விட்டது !!

ஸ்ரீ புகழேந்திப் புலவர் அருளிச்செய்த

நளவெண்பா மூலமும்

(தெளிபொருள் விளக்க—அகல உரையும்)

(செய்யுள் தலைப்பு, பதவுரை, கருத்துரை, விரிவுரை, விசேஷஇலக்கண இலக்கியக் குறிப்புகளுடன் கூடியது.)

இந் "நளவெண்பா" வின் உரை அமைப்பு மாணவர்க்கும் மற்றவர்க்குந் தெற்றென விளங்கும். 413-ம் செய்யுள் "நல்லரசனாகிய நளனை நோக்கிப் புல்லரசனாகிய புட்கரன் 'க்ஷேமந்தானா' நன்று வினவினனெனல்" என்பது போன்ற தலைப்புகள் ஒவ்வொரு செய்யுட்கும் வரையப்பட்டுள்ளது. கருத்துரையும் அதனடியில், அதனதன் சூத்திரமும் இலக்கணக் குறிப்பும் உள.

முழு காலிகோ பையின்டு விலை ரூ. **2**

ஸ்ரீ லக்ஷிமி புத்தகசாலை,
புரசைபாக்கம் ஐரோட், வேப்பேரி, சென்னை.

இனம்! இனம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை ரூ-4 சாதா ரகம் பொடி வீசை ரூபா 3½. டாக்டர் B. S. மல்லையா M. B., & C.M., & M.L C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்கு அணா 4. டஜன் ரூபா 2¼ ஒரு சோர்டின் ரூபா 1¾ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ. 44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

Estd. NATIONAL **1906**

INSURANCE COMPANY LIMITED.

Head Office:-**9, Old Court House St., Calcutta**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.

Apply to:— R. G. DAS & CO., *Managers.*

T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேராவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியம், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது விலை ரூ. 1-8.

விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)